# மித்ரா டைம்ஸ்


MITRA TIMES

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்
Tamil & English Monthly

ஆண்டு-3 இதழ்-2 ஜுலை-2017 விலை ரூ.20/- ஆண்டு சந்தா ரூ.240/-
Volume-3 Issue-2 July-2017 Price Rs.20/- Annual Subscription Rs.240/-








யீ

# காவலரே கள்வரானால்!

- ஆசிரியர் கடிதம்

அன்புடையீர் வணக்கம்!

"மங்கை சூதகமானால் கங்கையிலே மூழ்கலாம்; கங்கையே சூதகமானால் எங்கே போய் மூழ்குவது?" என்றார் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். "தோட்டம் காக்க போட்ட வேலி பயிரைத் தின்பதோ..." என்ற பாடல் வரி ஒரு திரைப்படத்தில் இடம் பெறும். இவ்விரண்டும் பொறுப்பிலுள்ளவர்கள் தவறு செய்தால் ஏற்படும் விளைவுகளை எதிரொலிக்கும் வெளிப்பாடாகும்.

அரசியல் அமைப்பு வகுத்துத் தந்த நெறிப்படி நிர்வாகம் சட்டமன்றம், ஆட்சித்துறை, நீதித்துறை என்ற மூன்று வழிகளில் மக்களாட்சித் தத்துவத்தை உள்ளடக்கி உள்ளது. அரசு சட்டமியற்றும். ஆட்சித்துறை, அதை அமல்படுத்தும். நீதித்துறை சட்டத்திலோ நிர்வாகத்திலோ அத்துமீறி நடக்கும்போது அதை விசாரித்து தண்டனை வழங்கும். இது ஒரு சங்கிலித் தொடரான நிர்வாகம். சட்டத்தைக் காப்பாற்றவேண்டிய காவல்துறையோ நீதித்துறையோ அதை மீறும்போது நிர்வாகம் சீர்குலையும்.

தமிழக முதலமைச்சராக இருந்த முதல்வர் ஜெயலலிதா ஒருமுறை "நீதிபதிகள் என்ன வானத்திலிருந்து குதித்தவர்களா?" என்று சட்டசபையில் கேட்டார். சில நீதிபதிகளும் சட்டத்தை தாங்கள்தான் படைத்தவர்கள் என்பதைப் போல விருப்பு வெறுப்போடு செயல்படுகிறார்கள். வழக்குக்கு சம்பந்தமில்லாத தேவையற்ற கருத்தை அரசுக்கு எதிராக சொல்வது சரியா என்றும் அவர் கேட்டார். காவல்துறை குற்றவாளிகளை பிடிப்பதைப் போல, காவல்துறையில் உள்ளவர்களே குற்றவாளிகளாக கைது செய்யப்படுகிற விவகாரம் சமீப காலமாக பத்திரிகைகளிலும் தொலைக்காட்சி ஊடகங்களிலும் காணப்படுகிறது.




2008-ல் அருப்புக் கோட்டையில் காவல்துறை ஆய்வாளராக காதர் பாட்ஷாவும், காவலராக சுப்புராஜ் என்பவரும் பணியாற்றினார்கள். அப்போது அந்த ஊரில் ஆரோக்கிய ராஜ் என்பவர் தனது நிலத்தை உழுதபோது சிவன் பார்வதி மற்றும் ஐம்பொன்னாலான சிலைகள் கிடைத்திருக்கிறது. இதை விற்க அவர் முயற்சித்தபோது காவல்துறை அதிகாரிகளான காதர் பாட்ஷா, சுப்புராஜ் ஆகியோர் ஆரோக்கியராஜை மிரட்டி சிலைகளைப் பிடுங்கிக் கொண்டு இவர்களே விற்க முயற்சி செய்திருக்கிறார்கள். சிலை கடத்தல் மன்னனான தீனதயாளனிடம் பேரம் பேசியபோது, அவர் சிதிலமான சிலைக்கு நீங்கள் கேட்ட விலையைத் தர முடியாது என்று சொல்லியிருக்கிறார். அவரையும் மிரட்டிதாங்கள் கேட்டத் தொகைக்கு சிலையை விற்று பணத்தை வாங்கிக் கொண்டனர்.

காவல்துறை என்பது மக்களைப் பாதுகாக்கும் ராணுவத்தைப் போன்றது. ராணுவ வீரர்கள் எல்லையில் நின்று அந்நியப் படையெடுப்பிலிருந்து நம்மை பாதுகாக்கிறார்கள். காவல்துறையினர் உள்நாட்டில் நம்மை கொலை, தொல்லை, வழிப்பறி போன்ற தொல்லைகளிலிருந்து பாதுகாக்கிறார்கள். இந்தப் புனிதப் பணிக்கு களங்கத்தை ஏற்படுத்துவது ஏற்புடையது அல்ல.. யாரோ ஒரு சிலர் செய்யும் தவறுக்கு ஒட்டுமொத்த காவல்துறையையே குறை சொல்வதா என்று கேட்கலாம். 50 லிட்டர் பாலில் 5 சொட்டு விஷம் ஊற்றினால் என்ன பாதிப்பு வரப்போகிறது என்று கேட்பதைப் போலத்தான் இதுவும்.

9 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இந்த சம்பவம் இப்போது வெளியே வந்துள்ளது. இது தொடர்பாக அன்று அருப்புக்கோட்டையில் காவல் ஆய்வாளராக இருந்து இன்றைக்கு திருவள்ளூர் மாவட்ட டி.எஸ்.பி.ஆக இருக்கும் காதர் பாட்ஷாவும், அன்றைக்கு காவலராக இருந்து இன்றைக்கு கோயம்பேடு சிறப்பு ஆய்வாளராக இருக்கும் சுப்புராஜ் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சட்டத்தை பாதுகாக்க வேண்டிய காவல் துறையினரே சட்டவிரோதமாக செயல்பட்டது பொதுமக்களை பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இது தொடர்பாக, வழக்கறிஞர் யானை ராஜேந்திரன் என்பவர் உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து இது தொடர்பாக, மேலும் விவரங்களை தருமாறு கேட்க... உயர்நீதிமன்றம் சிலைக்கடத்தல் தடுப்பு உயரதிகாரி பொன் மாணிக்கவேல் அவர்களிடம் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு கேட்டிருக்கிறது.

காவல்துறையின் அத்துமீறலை வெளிப்படுத்தும் மற்றொரு சம்பவம் சேலம் மாவட்டம், ஓமலூரில் நடந்துள்ளது. ஓமலூர் சுற்றுவட்டார பகுதிகளில் சமீப காலமாக பல்வேறு திருட்டு சம்பவங்கள் நடந்துள்ளது.



காதர் பாட்ஷா



ஐ.ஜி. பொன்மாணிக்கவேல்



வக்கீல் யானை ராஜேந்திரன்

இதுகுறித்து விசாரணை மேற்கொண்ட ஓமலூர் போலீசார் ரயில்வே கேட் பகுதியைச் சேர்ந்த மணி மீன்கார மாரியப்பன் என்பவரையும் அவரது உறவினர் மணி என்பவரையும் கைது செய்துள்ளனர். மணியின் வீட்டிற்கு சென்ற போலீசார் இரண்டரை லட்சம் ரூபாய் தர வேண்டும் என்று மிரட்டல் விடுத்ததாகவும், ஒரு லட்ச ரூபாயை மிரட்டி வாங்கியதாகவும் மணியின் மனைவி ஸ்ரீதேவி குற்றம் சாட்டியுள்ளார்.

திருட்டு வழக்கில் குற்றவாளிகளை பிடிக்க இயலாத போலீசார் கணக்கு காட்டுவதற்காக தனது கணவரை பொய் வழக்கில் போலீசார் கைது செய்ததாகவும் அதை போலீசாரே ஒப்புக்கொண்டதகாவும் ஸ்ரீதேவி கூறியுள்ளார். கணவர் மணியை பொய் வழக்கு போட்டு சிறைக்கு அனுப்பிய போலீசார் அதன் பிறகு தாங்கள் அடையாளம் காட்டும் நகை கடையில் நகைகளை விற்பனை செய்ததாக பொய் கூற வேண்டும் என்றும் அங்கிருந்து நகைகளை வாங்கிய பிறகு உங்களை விட்டுவிடுவோம் என்றும் அவர்கள் கூறியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி சுற்றுவட்டார மார்வாடி கடைகளுக்கு அழைத்துச் சென்று இந்த கடையில் திருட்டு நகையை விற்றேன் என்று சொல்லி அந்த நகைக் கடைக்காரிடம் மிரட்டி நகைகளை பிடிங்கிக் கொண்டனர். பத்திரிக்கைகளில் தங்களைப் பற்றி செய்தி வந்ததால் தான் வேலை இழந்ததாகவும், தனது குழந்தைகளின் படிப்பு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஸ்ரீதேவி வருத்தம் தெரிவித்துள்ளார்.

இதனால் தனது இரண்டு மகளுக்கும் விஷம் கொடுத்த ஸ்ரீதேவி தானும் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார். இதன் பிறகு மேல்சிகிச்சைக்காக சேலம் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்ட ஸ்ரீதேவி அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவரது குழந்தைகள் இருவரும் சிகிச்சையில் உள்ளனர். இதையடுத்து பொய் வழக்கு போட்ட ஓமலூர் போலீசார் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்படி காவல்துறையில் அத்துமீறலால் பலியாகின்ற செய்திகள் ஊடகங்களில் உடனுக்குடன் வெளிவந்தாலும் வெளிவராத செய்திகள் எவ்வளவோ இருக்கின்றது...

பொதுமக்களை பாதுகாக்கவேண்டிய காவல்துறையே வேலியே பயிரை மேய்வதைப் போல இருந்தால் சமுதாயம் எப்படிக் காப்பாற்றப்படும்?

**எம்.எஸ்.மூர்த்தி**



## சாதனை படைப்பதில் ஆண்களுக்கு பெண்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்ல...

# உன்னால் முடியும் பெண்ணே !

### 8-வது முறையாக எவரெஸ்ட் சிகரம்ஏறி கின்னஸ் சாதனை!

நம் இந்தியாவை சுற்றி இயற்கை அமைத்த அரண் தான் இமயமலை. இன்னும் முழுமையாக ஆராயப்படாத இந்த அரண் பனிமூடியது. மேகங்கள் உரசும் எழில் கொண்டது. ஹிம் என்றால் பனி, ஆலயா என்றால் கோவில். பனி தெய்வத்தின் உறைவிடம் எனப்படும் இமயத்தை இந்தியர்கள் கடவுளின் வீடு என்று நம்பி வருகிறார்கள் . பௌத்தர்களும் அது புத்தரின் உறைவிடம் என்று வழிபடுகிறார்கள். இன்று வரை பௌத்த துறவிகள் இமயமலையை வழிபடுவதை ஒரு சடங்காகவே வைத்திருக்கிறார்கள். இதன் உச்சி என்று சொல்லப்படும் எவரெஸ்ட்தான் உலகின் மிக உயரமான சிகரம் என்று எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் எவரெஸ்ட் என்பது தாமஸ் எவரெஸ்ட் என்ற ஆங்கிலேய நில அளவையாளரின் பெயர் என்பதோ, இந்தியாவின் நிலப்பரப்பை துல்லியமாக அளவிடுவதற்காக முதன் முதலாக நடைபெற்ற நில அளவைபணியை தலைமை ஏற்று நடத்தியவர் இவர் என்பதோ பெரும்பான்மையினர் அறிந்திருப்பதில்லை.

இதற்கிடையில் அந்த எவரெஸ்ட் சிகரத்தில் 8 முறை ஏறி நேபாளத்தை சேர்ந்த பெண் புதிய சாதனை படைத்துள்ளார். ஆம்..

நேபாளத்தை சேர்ந்த மலை ஏறும் வீராங்கனை லக்பா ஷெர்பாவுக்கு 44 வயது என்பதும். இவருக்கு 3 குழந்தைகள் உள்ளனர் என்பதும்தான் ஹைலைட். சிறு வயதில் இருந்தே இவருக்கு மலை ஏறுவதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. ஒரு கால கட்டத்தில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைக்க வேண்டும் என விரும்பினார். அவரது ஆசை 2000ம் ஆண்டில் நிறைவேறியது. முதல் குழந்தை பிறந்த 8 மாதங்களுக்கு பின் இச்சாதனையை நிகழ்த்தினார். அதன் பின் அவரது மலையேறும் ஆர்வம் அதிகரித்தது. தொடர்ந்து எவரெஸ்ட் சிகரம் ஏறினார்.

2வது முறை எவரெஸ்ட் சிகரம் ஏறும் போது அவர் 2 மாத கர்ப்பிணியாக இருந்தார். அதன் பிறகு 2வது குழந்தை பிறந்தது. தொடர்ந்து எவரெஸ்ட் மலை மீது ஏறுவதை பொழுது போக்காவே லக்பா ஷெர்பா செய்து வந்தார். கடந்த 2016ம் ஆண்டு மே 26-ம் தேதி ஏழாவது முறையாக எவரெஸ்ட் மலையேறி புதிய கின்னஸ் சாதனை படைத்தார்.

சமீபத்தில் 8-வது முறையாக எவரெஸ்ட் சிகரம் ஏறி புதிய சாதனை படைத்தார். இதன் மூலம் அவரது சாதனையை அவரே முறியடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. லக்பா ஹெர்பாவிற்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**1941** ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் பிறந்த ஒரு தமிழரான நவநீதம் பிள்ளை ஓர் இந்திய வம்சாவளிப் பெண். தென்னாப்பிரிக்காவின் இனவெறி ஆட்சி முடிவுக்கு வந்ததன் பிறகு அந்நாட்டின் உயர்நீதிமன்றத்துக்கு தேர்வுசெய்யப்பட்ட வெள்ளையினத்தவரல்லாத முதல் நீதிபதி என்ற பெருமைக்குரியவர்.

இவர் நிறவெறி மிகுந்த தென் ஆப்பிரிக்காவில், நீதிபதியாக உயர்ந்ததே மாபெரும் சாதனைதான். இப்போது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளராக அகில உலகமும் வியப்புடன் பார்க்கும் உயரத்தில் ஜொலிக்கிறார்.

இந்த நீதி தேவதை. சமீபத்தில், தன் முன்னோர்கள் பிறந்த பூமியான இந்தியாவுக்கு வருகை புரிந்த நவநீதம் பிள்ளை, ஊடகங்களின் முக்கிய செய்தியானார்.

தன் வாழ்க்கை முழுதுமே பல வேதனைகளை சந்தித்த இவர் பிறந்தது, வளர்ந்தது எல்லாமே தென் ஆப்பிரிக்காவில்தான். ஏழை குடும்பத்தில் ஒரு பேருந்து ஓட்டுநரின் மகளாகப் பிறந்த இவரை, உலகப் புகழ் பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழகம் வரை சென்று சட்டம் படிக்கச் செய்தது இவருடைய அம்மாதானாம்.

"என் அம்மாவை என் தாத்தா பள்ளிக்கு அனுப்ப வில்லை, எழுத, படிக்க தெரிந்து விட்டால், என் அம்மா யாருக்காவது காதல் கடிதம் கொடுத்து விடுவாரோ என்கிற பயம்தான் காரணமாம். தனக்கு நேர்ந்த கொடுமை எங்கள் நால்வருக்கும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் அம்மா மிகுந்த கவனத்துடன் இருந்தார். பெண்களுக்கு கல்வியும் சுதந்திரமும் அவசியம் என்று அவர் நம்பியதால்தான், இன்று நான் இப்படி ஒரு பதவியில் வந்து உட்கார்ந்திருக்கிறேன்!" என்கிறபோது ஈரத்துடன் பளபளக்கின்றன அவர் விழிகள்!

1982ம் ஆண்டில் அமெரிக்காவில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்று 1988 இல் முனைவர் பட்டமும் பெற்றார்.

# தென்னாப்பிரிக்காவில் ஓர் எவரெஸ்ட் பெண்மணி



1967 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவின் நட்டால் மாகாணத்தின் முதலாவது பெண் சட்டத்தரணியாக அவர் பணியாற்றத் தொடங்கினார். அப்போதே நிற வெறிக்கு எதிராக மிகுந்த உறுதியுடன் குரல் எழுப்பினார் நவநீதம் பிள்ளை. இதற்காக அப்போதைய தென் ஆப்பிரிக்காவை ஆண்ட வெள்ளையர்களால் இவர் சந்தித்த பிரச்சினைகள் ஏராளம். ஒரு கட்டத்தில் இவருடைய பாஸ்போர்ட் முடக்கி வைக்கப்பட்டது. அதற்கெல்லாம் அயர்ந்து விடாமல் சட்டத்தின் மூலமே தன்னைத் தற்காத்துக் கொண்டதோடு, நிறவெறியால் பாதிக்கப் பட்டவர்களுக்கு விடிவெள்ளியாகவும் விளங்கினார்.

"நிற வெறிக்கு எதிராக 28 ஆண்டுகள் போராடினேன். சட்டக் கல்லூரியில் வெள்ளையர் அல்லாதவர்களுக்கான தனி வகுப்பறையில் படித்துத்தான் சட்டம் முடித்தேன். ஒரு வழக்குரைஞராக, நீதிமன்றத்தில் பிறரின் உரிமைகளுக்காக வாதாடிய சமயத்திலும்கூட, நான் வெள்ளையர்களில் ஒருத்தி இல்லை என்ற ஒரே காரணத்துக்காக நீதிபதியின் அறைக்குள் நுழைகிற உரிமை எனக்குத் தரப்படவில்லை. ஆனால், அந்த வலிகளெல்லாம்தான் எனக்கு வலிமை தந்தது" என்று தன் வாழ்நாளின் கறுப்புப் பக்கங்களை

கசப்போடு திரும்பிப் பார்க்கிறார் நவநீதம் பிள்ளை.

தென்னாபிரிக்க விடுதலைப் போராளிகளுக்காவும், இவரது கணவர் உட்பட தென்னாபிரிக்க விடுதலைச் செயற்பாட்டாளர்களுக்கும் அவர் ஒரு பாதுகாவலராக கடமையாற்றியவர். 1973 இல் நெல்சன் மண்டேலா ரொபன் தீவு சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது அவரை வழக்கறிஞர்கள் சந்திப்பதற்கு வெற்றிகரமாக வாதாடி வெற்றி பெற்றார்.

1992-இல் தன்னுடன் வேலை பார்த்த சக வழக் கறிஞர்கள் இருவர் துணையுடன் ''இக்வாலிட்டி நவ்'' என்ற பெண்களுக்கான மனித உரிமை அமைப்பை தோற்றுவித்து பெண்களின் நலனுக்காகவும் போராடி வருகிற இவர், கறுப்பு இன மக்களின் மனதில் எவரெஸ்ட்டாக உயர்ந்து நிற்கிறார்.

மனித உரிமை சட்டங்கள் பயின்றிருந்த அவர், 1995ல் தென்னாப்பிரிக்காவின் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். **அதுவரை வெள்ளையினத்தவர் மட்டுமே வீற்றிருந்த உயர் நீதிமன்ற நீதிபதியின் ஆசனத்தை அலங்கரித்த வெள்ளையரல்லாத முதல் ஆள் அவர்தான்.**

ருவாண்டா இனப்படுகொலையை விசாரிப்பதற்காக டான்ஸானிவின் அருஷா நகரில் அமைக்கப்பட்ட தீர்ப்பாயத்தில் நீதியரசராக நியமிக்கப்பட்டதிலிருந்து சர்வதேச அளவில் அவர் பங்காற்றத் துவங்கினார். நான்கு ஆண்டுகாலம் அப்பொறுப்பை வகித்த பின்னர் தி ஹேக்கிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இவர் நீதிபதியாக இருந்தார்.

2003 இல் இவருக்கு பெண்கள் உரிமைக்கான குருபர் பரிசு வழங்கப்பட்டது. பூகோள ரீதியாகவும் பாலியல் மற்றும் அனுபவ ரீதியாகவும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் பொறுப்புக்கு இரு குழுக்களால் அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

"இந்த சாதனைக்குப் பின்னால் நிச்சயம் என் கணவர் பரஞ்ஜோதியின் பங்கு இருக்கிறது. அவரும் வழக்குரைஞர் தான். நிற வெறிக்கு எதிராக அவர் வாதாடியதால் ஐந்து மாதங் கள் சிறையில் தள்ளப்பட்டார். இப்போது அவர் உயிருடன் இல்லை என்றாலும் என் மனதிலும் நினைவிலும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்" என்று உணர்வுபூர்வமாக நினைவுகூர்கிறார் தன் கணவரை.

"ஒரு காலத்தில் வெள்ளையர்கள் எங்களை பிளாக் பியூட்டி என்று அழைத்தனர். ஆனால், குதிரைகளைத் தான் அப்படி அழைப்பார்கள் என்று தெரிய வந்தபோது அந்த வார்த்தையையே நான் வெறுத்தேன். அப்படி, அவர்களின் ரத்தத்திலேயே கலந்திருக்கும் நிறவெறிக்கு ஒரு முற்றுப்புள்ளி வரும் என நான் நினைத்துக்கூட பார்த்ததில்லை. இப்போது உள்ள குழந்தைகளுக்கு நிற வெறி என்றால் என்ன என்று கூட தெரியவில்லை. அது தான் எங்களின் வெற்றி..."என்று கண்களை மூடி மெதுவாக சிரிக்கிறார் நவநீதம்பிள்ளை.

**திருமதி. சுஜாதா மூர்த்தி**



பிரம்மாண்டமான மேட்டூர் அணையைக் கட்டி கொடுத்துச் சென்றுள்ளார் ராயல்என்ஜினியர் கர்னல் டபுள்யூ எம்.எல்லீஸ். என்பவர்.

இன்றைக்கு 48 ஆயிரம் கோடி ரூபாய்கொட்டினால் கூட கட்ட முடியாத பிரம்மாண்டத்தை கொண்டுள்ள இந்த அணையை அன்றைக்கு 4 கோடியே 80லட்சம் ரூபாய் திட்டத்தில் கட்டி முடித்துள்ளனர்.

மலைக்க வைக்கும் மாபெரும் திட்டம். யாவரும் வியக்கும்மதி நுட்பம். மேட்டூர் அணையை இதுவரை இரண்டு முறை மின்னல்தாக்கியது.

இருப்பினும் அணைக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. தமிழகத்தில் காவிரி கரையோரமாக நிறைய நிலங்களும், விவசாயம் செய்யக்கூடிய ஆட்களும் இருந்தும் போதியநீர்ப்பாசன வசதி இல்லாததால் விவசாயம்சரிவர செய்ய முடியவில்லை.

இதை உணர்ந்த ஆங்கிலேயே அரசு காவிரியின் குறுக்கே அணை கட்டமுடிவு செய்து இடத்தை தேடியது.

15 ஆண்டுகள் கழித்து அன்றைய ஆங்கிலேய அரசின் சென்னை மாகாண கவர்னர் ஸ்டான்லி காவிரியின்குறுக்கே அணைக் கட்ட உத்தரவிட்டார்.

இந்த உத்திரவை போட்ட கவர்னர், ஸ்டான்லியின் பெயரால் மேட்டூர் அணை இப்போது ஸ்டான்லி நீர் தேக்கம் என்றும் அழைக்கப்படுகிது.

இந்தஅணையில் கடல் போல காட்சியளிக்கும்அளவுக்கு தண்ணீர் தேக்கப்பட்டது.அணையை கட்டிய பொறியாளர்டபிள்யூ.எம்.எல்லீஸ் ராயலை மேட்டூர் அணையின் சிற்பி அன்றும், இன்றும் புகழப்படுகிறார். இனி என்றும் புகழப்படுவார்.

இந்திய அளவிலான பெரிய அணைகளில் ஒன்றான இதன் உச்சநீர் மட்ட அளவாக 120 அடி வரை நீரைத்தேக்கலாம்.

அதன் பிறகு ஓடிவரும் நீர் வரத்து யாவும் உபரியாக அணைக்கட்டில் நிற்காமல் நிரம்பாமல்தானாகவே வெளியேறிச் செல்லும் அற்புதமான இயற்கையுடன் இணைந்த கட்டுமானப்பணி, எந்தக் காலத்திலும் அணைக்கோ அணை சார்ந்த கட்டுமான அமைப்புகளுக்கோ ஒருக்காலும் ஊறுவிளைக்கமுடியாத தன்மைகளுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

மேட்டூர் அணை கட்டி முடிக்கப்பட்ட நாள்; 21.8.1934
அணைக் கட்ட ஆன செலவு 4.80 கோடி.
அணையின் நீளம் 5.300 அடி
அணையின் கொள்ளளவு 93.50 டி.எம்.சி.
அணையின் உயரம் 214 அடி
அணையின்அகலம் 171 அடி
அணையின் சேமிப்பு உயரம் 120 அடி

அணையின் நீர்பிடிப்பு பரப்பளவு 59.25 சசதுர மைல் 2,71,000 ஏக்கர் பாசன வசதி அடைகிறது.

அணையின் மூலம் தினமும் 240 மெகாவாட் மின்உற்பத்தி செய்யப்படுகிறது.

சேலம், நாமக்கல், ஈரோடு, திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டனம் என மொத்தம் 11 காவிரிப் பாசனப் பகுதிமாவட்டங்களுக்கு மேட்டூர் தண்ணீர்போகிறது.

மொத்தம் 16 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

அது மட்டுமல்லாமல், மேட்டூர் அணையை நம்பி 4000 மீனவர்கள் குடும்பங்களும் உள்ளன.

மேட்டூர் அணையிலிருந்து வெளியே வரும்காவேரி அதே பெயரில் 106, கிலோமீட்டர் தூரம் செல்கிறது.

இதன் கிளைநதிகளாக கொள்ளிடம், பொன்னியாறு,கல்லணை கால்வாய், வெட்டாறு, வெண்ணாறு, குடமுருட்டி என்ற பெயரில் பல நதிகளாக 694 கிலோ மீட்டர் தூரம் செல்கிறது.

இதை தாண்டி, 1904 கிலோ மீட்டர்தூரத்துக்கு வாய்க்கால் மூலம் பாசன வசதியை கொடுக்கிறது.

இப்படி தமிழகத்தை நெற்களஞ்சியமாக்கும் வகையிலும், பல்வேறு மாவட்ட மக்களின் தாகம் தீர்க்கும் வகையிலும், கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் தன் மண்,மக்கள், உறவு மறந்தும், உணவும் தூக்கமும் துறந்தும் மேட்டூர் அணை என்ற பிரம்மாண்டத்தை வடிவமைத்து கட்டிக்கொடுத்த கர்னல் டபுள்யூ. எம்.எல் லீசை, அணையும் நம் மனசும் நிறைந்துள்ள இந்த நேரத்தில் நினைவு கூர்வோம்.



# நீதிபதிக்கு தண்டனை!

உச்ச நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து தற்போது மேற்கு வங்க மற்றும் தமிழக போலீஸாரால் தேடப்பட்டு வரும் நீதிபதி சி.எஸ்.கர்ணனின் வாழ்க்கைப் பயணம் பரபரப்புக்கு பஞ்சமில்லாததாக இருந்துள்ளது.

கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி யாக பதவி வகிக்கும் சி.எஸ்.கர்ணனின் இயற்பெயர் கருணாநிதி. கடந்த 1991ல் தன்னுடைய பெயரை சின்னசாமி சுவாமிநாதன் கர்ணன் என அவரே மாற்றிக்கொண்டதாக கூறப்படுகிறது.

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் அருகே உள்ள கர்ணநத்தம்தான் அவரது சொந்த ஊர். கடந்த 1955 ஜூன் 12ம் தேதி பிறந்த கர்ணனின் தந்தை சுவாமிநாதன் குடியரசுத் தலைவரிடமிருந்து நல்லாசிரியர் விருது பெற்றவர். ஆனால் கர்ணனுக்கு ஆரம்பக் கல்வியை புகட்டியது அவரது தாயார் கமலம் அம்மாள்தான்.

மங்கலம்பேட்டை பேரூராட்சி உயர் நிலைப்பள்ளியில் பள்ளிப் படிப் பையும், விருத்தாச்சலம் கலைக் கல்லூரியில் ஓராண்டு புதுமுக வகுப்பையும், சென்னை புதுக்கல்லூரி யில் மூன்றாண்டு அறிவியல் பட்டப்படிப்பையும் முடித்த கர்ணன், அதன்பிறகு 1983ல் சென்னை சட்டக்கல்லூரியில் மூன்றாண்டு சட்டம் பயின்று, அதே ஆண்டு வழக்கறிஞராகவும் பதிவு செய்தார்.

ஆரம்பத்தில் அரசியலில் தீவிரம் காட்டிய கர்ணன் 2001ல் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக பூத் ஏஜெண்டாக செயல் பட்டுள்ளார். அதன்பிறகு அதிமுகவில் இருந்து விலகி காங்கிரஸிலும் கால் பதித்துள்ளார்.

சுமார் 23 ஆண்டுகளாக உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக தொழில் புரிந்த கர்ணன், சிவில் வழக்குகளில் அதிகமாக வாதாடி வந்துள்ளார். சென்னை பெருநகர குடிநீர் வடிகால் வாரியத்தின் சட்ட ஆலோசகராகவும், தமிழக மற்றும் மத்திய அரசு வழக்கறிஞராகவும் பதவி வகித்துள்ளார். ஆனால் வெளிவட்டாரத்தில் கர்ணனின் முகம் அதிகம்



தெரிய ஆரம்பித்தது 2005ல் தான். வாழ்வில் படிப்படியாக உயர்ந்து கடந்த 2009 மார்ச் மாதம் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றார். அன்று முதல் தற்போது வரை நீதிபதி கர்ணனின் தடாலடி நடவடிக்கைகளுக்கு பஞ்சமே இல்லை.

உயர் நீதிமன்றத்துக்கு புதிய நீதிபதிகள் தேர்வு தொடர்பான வழக்கை நீதிபதிகள் விசாரித்துக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த கர்ணன், நீதிபதிகள் தேர்வில் வெளிப்படைத்தன்மை இல்லை எனக்கூறி பரபரப்பு ஏற்படுத்தினார். பின்னர் சிவில் நீதிபதிகள் நேர்முகத் தேர்வை டிஎன்பிஎஸ்சி நடத்தக்கூடாது என தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்து தடை பிறப்பித்தார். ஆணும், பெண்ணும் திருமணம் செய்யாமல் ஒரே வீட்டில் சேர்ந்து வாழ்ந்தால், அவர்களை கணவன் மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என அதிரடி தீர்ப்பு வழங்கினார்.

கடந்த 2015ல் சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகித்த எஸ்.கே.கவுல் மீது பனிப்போரைத் தொடுத்த கர்ணன், தான் ஒரு தலித் நீதிபதி என்பதால் தன்னை எஸ்.கே.கவுல் மற்றும் சக நீதிபதிகள் ஒதுக்கி வைப்பதாகக் கூறி அவர்கள் மீது எஸ்சி, எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க ஆணையத்துக்கு பரிந்துரைத்தார். மேலும் எஸ்.கே.கவுல் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட நீதிபதிகள் மீது ஊழல் குற்றம் சுமத்தி ஜனாதிபதி மற்றும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, பிரதமர், சிபிஐ இயக்குநர் உள்ளிட்டோருக்கு புகார் கடிதம் அனுப்பினார்.

இதை நீதிமன்ற அவமதிப்பாக கருதிய உச்ச நீதிமன்றம், அவர் மீது தானாக முன்வந்து வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகிறது. இதன்காரணமாக அவரை கடந்த 2016 பிப்ரவரி மாதம் சென்னையில் இருந்து கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த இடமாற்றத்துக்கு கடந்த 2016 பிப்ரவரி 15ம் தேதி தனக்குத்தானே தடை விதித்து பரபரப்பு ஏற்படுத்திய கர்ணன், அன்று முதல் இன்று வரை உச்ச நீதிமன்றத்துக்கு எதிரான தனது உரசல் போக்கை தொடர்ந்து வருகிறார்.

இந்த வழக்கு விசாரணைக்காக நேரில் ஆஜராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. உச்சநீதிமன்றத்தின் உத்தரவுக்குக் கர்ணன் முழுமையாக ஒத்துழைக்காத நிலையில், நீதிபதி கர்ணனின் மனநலம்குறித்து, கொல்கத்தா அரசு மருத்துவர்கள் பரிசோதனை நடத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. இந்நிலையில் மனநலப் பரிசோதனைக்குக் கர்ணன் ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டது.

இதனையடுத்து நீதிபதி கர்ணனை கைது செய்து 6 மாதம் சிறையில் அடைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டது. உச்சநீதிமன்ற இந்த உத்தரவு வருவதற்கு முன்னரே சென்னை வந்த நீதிபதி கர்ணன் மேற்குவங்க போலீசார் சென்னை வரும் முன்னரே தலைமறைவானார். தலைமறைவான காலகட்டத்தில் பணியிலிருந்து ஓய்வுபெறுவதற்குச் சில காலங்களே உள்ளதால், கைது உத்தரவை ரத்துசெய்ய வேண்டும் என்று நீதிபதி கர்ணன் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். ஆனால் உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை,இது தொடர்பாக குடியரசுத் தலைவருக்கு அளித்த மனு மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தமிழக காவல்துறையின் உதவியுடன் கோவை மலுமிச்சம்பட்டி பகுதியில் உள்ள கோல்டன் சொகுசு விடுதியில் மறைந்திருந்த கர்ணனை கைது செய்தனர். சென்னை அழைத்து வரப்பட்ட கர்ணன் விடிய விடிய விமான நிலையத்தில் தங்க வைக்கப்பட்டார்.

2016 மார்ச் முதல் கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்து வரும் நீதிபதி சி.எஸ்.கர்ணன், ஜூன் 12-ம் தேதியோடு ஓய்வுபெற உள்ள நிலையில் உச்ச நீதிமன்றம் விதித்துள்ள 6 மாத சிறை தண்டனையால் சிறை செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.




# வெட்டுப்பட்டதால் கையால் தொட்டு பூஜை செய்யாத சிவ ஸ்தலம்!

திருவள்ளூர் மாவட்டம் திருப்பாச்சூரில் உள்ள சிவன் கோவிலில் 'விநாயகர் சபை' உள்ளது. இத்தகைய சபை தமிழ்நாட்டில் எந்த ஒரு ஆலயத்திலும் இல்லை.



பல்லாண்டுகளுக்கு முன்பு மூங்கில் மரங்கள் நிறைந்த வனமாக இத்திருக்கோயில் அருகில் உள்ள புல்வெளியில் மேய்ச்சலுக்கு வந்த பசுக்களில் ஒன்று மட்டும் தொடர்ந்து இங்கு ஒரு சிறு மேட்டின்மீது அடிக்கடி பால் சொரிந்தது. இதனைக் கண்ட சிலர் மன்னரிடம் சொல்ல அவர் அந்த இடத்தை தோண்டிப் பார்க்க உத்தரவிட்டார். வாசி எனும் கருவியைக் கொண்டு அந்த இடத்தைத் தோண்டியபோது வெட்டுப்பட்ட இடத்திலிருந்து இரத்தம் பீரிட்டது. மன்னன் அதிர்ந்து பார்த்தபோது சிவன் சுயம்பு லிங்கமாக வெளிபட்டார்.

கருவறையில் சிவன் சுயம்பு லிங்கமாக சதுர வடிவ பீடத்தில் காட்சித் தருகிறார். சிவன் தலையில் வெட்டுப்பட்ட தடத்துடன் தன் உடலில் மேல் பகுதி





மட்டும் இடப்புறத்தில் சற்று நகர்ந்தபடியான கோலத்தில் இருப்பது சிறப்பு. காயம்பட்ட லிங்கம் என்பதால் இவரை கையால் தொட்டு பூஜைகள் செய்யப்படுவதில்லை. அர்த்த மண்டபத்தில் ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த ஸ்ரீசக்கரம் இருக்கிறது. மூங்கில் வனத்தின் அடியில் தோன்றிய சிவன் என்பதால் இவருக்கு பாசுரநாதர் என்றொரு பெயரும் உண்டு. பாசு என்றால் மூங்கில் என்று பொருள்.

சிவன் இங்கு லிங்க வடிவில், பெருமாள் வினை தீர்த்த ஈஸ்வரன் என்ற பெயரில் தனியாகவும் இருக்கிறார். சிவனின் தேவாரப் பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 249 வது தேவாரத்தலம் ஆகும்.

# திருக்குளத்தை தூர் வாரிய தி.மு.க.வினர்



வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ.

இத்திருக்கோயிலுக்கு சொந்தமான திருக்குளத்தை தூர்வாரும் பணி திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் அவர்களின் பெரும் முயற்சியால் நடைபெற்றது. இந்தப் பணியை எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் நேரில் பார்வையிட்டார்.



இங்குள்ள கோபுரம் 5 நிலைகளைக் கொண்டது. இங்குள்ள தல வினாயகர் வலம்புரி விநாயகர். இங்குள்ள விமானம் கஜபிருஷ்டம்.

தடைபட்ட திருமணங்கள் நடக்கவும், தோஷங்கள் நீங்கவும் பிராத்தித்தால் நிவர்த்தி ஆகும். பிரார்த்தனை நிறைவேறியவுடன் விநாயகர் சபையில் 11 ஸ்ரீ சக்கரத்தில் 5 நெய் தீபங்கள் ஏற்றி நேர்த்திக் கடன் செலுத்துகின்றனர்.

சிவன் சன்னதிக்கு வலப்புறத்தில் அம்பாள் தனிச் சன்னதியில் இருக்கிறார். இதனை சிவன், அம்மாள் திருமணம் செய்த கோலம் என்பார்கள். இருவரது சன்னதிகளுக்கும் இடையே விநாயகர், வள்ளி தெய்வானையுடன் அமைந்து சுப்பிரமணியர் என ஒரே வரிசையாக சிவ குடும்ப தெய்வங்கள் இருக்கிறது. இவ்வாறு கோயில்கள் அமைந்திருப்பது அபூர்வம்.

ராஜகோபுரத்திற்கு நேரே நடராஜர் தனிச்சன்னதியில் இருக்கிறார். மூலவர் விமானம் கஜபிருஷ்ட அமைப்பிலும், அம்பாள் விமானம், கோபுரம் போன்ற அமைப்பிலும் வித்தியாசமாக இருக்கிறது. கோஷ்டத்தில் உள்ள விஷ்ணு துர்க்கையின் காலுக்கு கீழே மகிஷாசுரன் இல்லாமல் காட்சி தருகிறாள்.

பெரும்பாலும் சிவனுக்கு தாழம்பூ வைப்பதில்லை. ஆனால் இக்கோயிலில் சிவராத்திரி அன்று ஒரு கால பூஜையில் மட்டும் தாழம்பூவை வைத்து பூஜை செய்கின்றனர். இந்த அற்புதக் காட்சியை காணும்போது ஆணவம், பொய் சொல்லும் குணங்கள் மறையும் என்கிறார்.

தட்சனின் யாகத்திற்கு சென்றதால் பார்வதி தேவியை பூலோகத்தில் சாதாரண பெண்ணாக பிறக்கும்படி சிவன் சாபமிட்டார். இதனால் பூலோகத்திற்கு வந்த அம்பாள், சிவனை வேண்டி தவம் செய்தார். தேவிக்கு மனமிறங்கிய சிவபெருமான் "தன் காதலியே" என்று சொல்லி அன்போது அழைத்து பார்வதியை மன்னித்து அருளினாராம். இதனால் இங்குள்ள அம்பாளை "தங்காதலி அம்பாள்" என்கின்றனர். அம்பாளிடம் வேண்டிக் கொண்ட தம்பதியர்களுக்குள் ஒற்றுமை நீடிக்கும் என்பது ஐதீகம்.

அசுரர்களை அழித்ததனால் மகா விஷ்ணு 16 செல்வங்களில் 11 செல்வங்களை இழந்தாராம். அந்த செல்வங்களை பெறுவதற்காக சிவனை வேண்டினார். அவரது ஆலோசனைப்படி 11 விநாயகர்களை பிரதி–ஷ்டை செய்து இழந்த செல்வங்களைப் பெற்றார். இதை உணர்த்தும் விதமாக 11 விநாயகர் சிலைகளை ஒரே



இடத்தில் அமைத்து அதை விநாயகர் சபை என்று அழைக்கின்றனர்.

இப்பகுதியை ஆட்சி செய்து வந்த குறும்பன் எனும் சிற்றரசன் ஒருவன் மன்னனுக்கு சரியாக வரி கட்டாமல் இருந்தான். எனவே அவனுடன் போரிட்டு வரியை வாங்க சோழ மன்னன் ஒருவன் குறும்பன் மீது படையெடுத்தான். காளி பக்தனான குறும்பன் அவளை ஏவி விட்டு சோழ படைகளை விரட்டியடித்தான். சோழ மன்னன் சிவனிடம் தனக்கு உதவுமாறு வேண்டினான். சிவன் மன்னனுக்கு உதவும் பொருட்டு காளியை அடக்க நந்தியை அனுப்பி வைத்தார். பூலோகம் வந்த நந்தியை காளியுடன் போரிட்டு அதனை வென்றார். காளியின் இரண்டு கால்களிலும் பொன் விலங்கை பூட்டியும் அதனைக் கட்டுப்படுத்தினார். நந்தியால் அடக்கப்பட்ட சொர்ணகாளி இக்கோயில் பிரகாரத்தில் நான்கு கைகளுடன் தனியே நின்ற கோலத்தில் இருக்கிறாள். இவளது கால்களில் விலங்கு போடப்பட்டிருக்கிறது. பவுர்ணமி தோறும் காளிக்கு சிறப்பு பூஜை நடைபெறுகிறது.

கோயில் நடை திறக்கும் நேரம் : காலை 6 மணி முதல் 12 மணி வரை மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.

வழித்தடம் : சென்னையிலிருந்து திருப்பதி பேருந்து செல்லும் செல்லும் சாலையில் திருவள்ளூரிலிருந்து 3 கி.மீ. தொலைவிலும், கடம்பத்தூர் ரயில் நிலையத்திருந்து 3 கி.மீ. தொலைவிலும் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

தொடர்புக்கு : 9894486890


# கைவண்ணம் :






**S. JANAKI** STD X-A,
GOOD SHEPHERED M.H.S. SCHOOL
CHENNAI

மாணவர்கள் பக்கத்தில் உங்களுடைய குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்திட மித்ரா டைம்ஸ் மாத இதழுக்கு அனுப்பி வையுங்கள்!




S.SURYA
STD-VIII
SHERWOOD HALL SENIOR SECONDARY SCHOOL
CHENNAI





# காவல்துறை அதிகாரியின் கனிவு

காவல்துறை பணியில் எத்தனையோ உயரதிகாரிகளுடன் எனக்கு ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மிகப்பெரிய துன்பத்தை எனக்கு அளித்தாலும் , அதன் பயனாக காவலர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளை செய்ய இறைவன் வழங்கிய வாய்ப்புகளுக்கு நன்றி செலுத்துகிறேன்.....

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு நான் பணியாற்றிய இடத்தில் ஒரு பெண் காவலரின் மீதான விசாரணை எனக்கு வழங்கப்பட்டது. கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு பணியிலிருந்து அந்தப் பெண் காவலரை பணி நீக்கம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. மன நலம் பாதிக்கப்பட்ட அந்தப் பெண் காவலர் மிகவும் ஏழ்மையானவர். காவல் பணியும் பறிபோய்விட்டது, மன நலமும் பாதிக்கப்பட்ட நிலையில் அந்தப்பெண்ணை அவருடைய பெற்றோர் வீட்டை விட்டு வெளியேற்றி விட்டதால், பல இடங்களில் கூலி வேலை செய்து வாழ்ந்திருக்கிறார்.

இதை கேள்விப்பட்ட சில மகளிர் அமைப்புகள் அந்தப் பெண்ணின் மறு வாழ்வுக்காக உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்த காரணத்தால் , அந்தப் பெண்ணின் வழக்கை மறு விசாரணை செய்ய ஆணை வழங்கியதன் காரணமாக, விசாரணை அதிகாரியாக என்னை நியமித்து உத்தரவிட்டார் எனது உயரதிகாரி.

ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சம்பவம் . விசாரிக்கப்பட வேண்டிய சாட்சிகள் மொத்தம் 38 பேர்கள் . எனது விசாரணையை துவங்கிய போது தான் அந்தப் பெண் காவலரை பார்த்தேன் . மிகவும் அழுக்கடைந்த ஆடைகள் , தனக்கு மிகப்பெரிய அளவில் அநீதி இழைத்து விட்டார்கள் என்ற மன உளைச்சல் , அதன் பயனாக சொன்னதையே திருப்பித் திருப்பி சொல்லும் அந்தப் பெண் நிச்சயமாக தவறு செய்திருக்க வாய்ப்பில்லை என்ற எண்ணத்தோடு, சாட்சிகள் இருந்த இடங்களுக்கு அந்தப்பெண் காவலரையும் , அதற்கான ஆண் பெண் காவலர் குழுவினரையும் பல ஊர்களுக்கு அழைத்துச் சென்று நான் விசாரணை செய்தேன் .

ஆனால் மறு விசாரணை செய்யப்பட்ட அனைத்து சாட்சிகளும் இந்தப் பெண் காவலர் செய்தது குற்றம் என்பதை சாட்சியங்களோடு நிருபித்து வாக்கு மூலங்கள் அளித்தனர். பைத்தியக்கார பெண்ணை அழைத்துக் கொண்டு எதற்காக ஊர் ஊராக இந்த அதிகாரி அலைகிறார் என்ற ஏளனப் பேச்சுக்கள் ஒரு புறம் என்னை மிகவும் சோர்வடைய வைத்தது/ மறுபுறம் இந்தப் பெண் செய்தது குற்றம் தான் (proved) என்று விசாரணையை முடித்து அறிக்கை சமர்ப்பிக்க வற்புறுத்தப்பட்டேன்...

இரண்டு மாதங்கள் முடிந்து விட்டது. இரவெல்லாம் அந்த விசாரணை அறிக்கையை படித்தேன் . அதன் பிறகு எனது மறு விசாரணை அறிக்கையை அளித்தேன். எனது உயரதிகாரி அதை ஏற்க மறுத்து விட்டார். காரணம் , “விசாரணைப்படியும் சாட்சியங்களின் படியும் இந்தப் பெண் காவலர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மை. ஆனால் மன நலம் பாதிக்கப்பட்ட நிலையில் இந்தப் பெண் காவலர் செய்த குற்றத்திற்கு இவர் எந்த வகையிலும் பொறுப்பாக முடியாது“, என்று எனது விசாரணையை முடித்திருந்தேன்.

நல்ல மன நலமுடையவர் , உடல் நலமுடையவர் என்று அரசு மருத்துவரால் சான்றளிக்கப்பட்ட பின்னர் தான் ஒருவர் காவல்துறையில் சேர முடியும். அப்படி நல்ல மன நிலையில் காவல் பணியில் சேர்ந்த பெண்ணுக்கு, சில மோசமான அதிகாரிகள் கொடுத்த பாலியல் கொடுமைகள் தான் அந்தப் பெண் காவலரை மனநல பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. ஆனால் அதற்கான ஆதாரங்கள் அழிக்கப்பட்டு விட்டது ...

அதன் பிறகு அந்தப் பெண் காவலரின் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக அவரை கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தபோது உடனடியாக சென்னையில் உள்ள மன நல மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்து அங்கிருந்த மன நல மருத்துவர் சான்றிதழ் வழங்கியதோடு , சிகிச்சை முடியும் வரை அந்தப் பெண் காவலரை காவல் சம்மந்தப்பட்ட பணிக்கு அனுப்பக் கூடாது என்று தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் மன நல மருத்துவரின் பரிந்துரைப்படி செய்யாமல் , அந்தப் பெண் காவலரை காவல் பணிக்கு நியமித்திருக்கிறார்கள் அப்போதைய சில அதிகாரிகள்.

மன நல மருத்துவரின் ஆலோசனையை மீறி அந்தப் பெண் காவலரை பணிக்கு அனுப்பிய போது, தன்னிடம் தவறாக நடந்து கொண்டவர்களைத் தாக்கியிருக்கிறார்... ஆகவே தன் நிலை மறந்த நிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு அந்தப் பெண் காவலர் பொறுப்பாக மாட்டார் . ஆகவே இதில் இவரது தவறு ஏதுமில்லை என்ற எனது அறிக்கை தூக்கி தூர எறியப்பட்டது .

நிறைய அதிகாரிகள் எனக்கு அறிவுரை வழங்கினார்கள் , யாரோ ஒரு பெண்ணுக்காக உயரதிகாரியை பகைத்துக் கொள்ள வேண்டாம் என்று... உயரதிகாரியை நான் மிகவும் மதிக்கிறேன்... ஆனால் ஒரு அப்பாவி பெண் காவலருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது, ஆகவே எந்தக் காரணத்தைக் கொண்டும் எனது விசாரணை அறிக்கையை மாற்றித்தர முடியாது என்று உறுதியாகக் கூறி விட்டேன்.

எத்தனையோ நெருக்கடிகளை இதனால் நான் சந்தித்தேன். பிறகு வேறு வழியின்றி எனது விசாரணை அறிக்கை ஏற்கப்பட்டது .

நான் மறு விசாரணை அறிக்கை சமர்ப்பித்த ஒரு மாதத்திற்கு பிறகு ஒரு நாள் எனது அலுவலகத்திற்கு அந்தப் பெண் காவலர் வந்தார், தன்னை மீண்டும் பணியில் சேர நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்று கூறி ஆனந்தத்தால் கதறியழுதார். இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள் என்று கூறி அனுப்பினேன்.

15 வருட ஊதியம் மற்றும் பிற பணப்பயன்களோடு ஒரு மிகப்பெரிய தொகை அரசாங்கத்தால் அந்தப் பெண் காவலருக்கு வழங்கப்பட்டது. தற்போது நல்ல மன நிலையோடு உதவி ஆய்வாளராக அந்தப் பெண் காவலர் சேலம் மாவட்டத்தில் பணியாற்றி வருவதாகக் கேள்விப்பட்டேன் . இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்...

**'நீங்கள் காவல் துறையில் இல்லாதிருந்தால் ஒருவரும் உங்களைத் திரும்பிக் கூட பார்க்க மாட்டார்கள்", என்று சமீபத்தில் ஒரு அதிகாரி என்னிடம் கூறினார். உண்மை தான். இந்த உண்மையை நான் 15 ஆண்டுகளுக்கு முன்பே நன்கறிவேன்.**

**#சென்னை யில் பணியாற்றிய போது வீட்டிற்கு தேவையான காய்கறிகளை நான் தான் அருகிலுள்ள மளிகைக்கடையில் வாங்குவேன் . அந்தக் கடையில் வேலை பார்க்கும் சிறுவனுக்கு நான் காவல்துறை அதிகாரி என்று தெரியாது . கைலி கட்டிக்கொண்டு தான் கடைக்குப் போவேன் .**

**கொஞ்சம் சீக்கிரமா கொடுப்பா என்றால் மிகவும் கோபப்படுவான். திட்டுவான். வரிசையில் போய் நில்லுய்யா என்று கத்துவான்.**

**சில நேரங்களில் என்னுடைய காக்கிச் சட்டைக்குள் ஒளிந்திருக்கும் அதிகாரமும் , ஆணவமும் எட்டிப்பார்க்கும். " டேய் நான் யார் தெரியுமா ", என்று கோபத்தோடு கேட்பேன் . வேல வெட்டி இல்லாம ஊரச் சுத்துர, வொனக்கென்னையா மரியாதை", என்பான் . நானும் அமைதியாக வந்து விடுவேன்.**

**இன்று வரை அதே கடையில் தான் காய்கறிகள் வாங்குகிறேன். அந்தப் பையன் இப்போது வளர்ந்து பெரிய பையராகிவிட்டார். ஆனாலும் அதே போல் மிகவும் கேவலமாக திட்டுகிறான். என்னுடைய உண்மையான மதிப்பு அந்தத் தம்பிக்குத் தான் தெரிகிறது . நான் ஒன்றுமில்லாத குப்பை என்று.**

**என்னுள் ஆணவமும் பெருமையும் , எழும்போதெல்லாம் அந்தத் தம்பி தான் எனக்கு போதி மரம். அவனைப் பார்க்கும்போது சப்த நாடியும் அடங்கி விடும். அவ்வளவு கேவலமாகத் திட்டுவான் . இன்றைக்கும் அதை நான் ரசிக்கிறேன். இன்று வரை நான் யாரென்று அவனுக்குத் தெரியாது.**

**போலி மரியாதைகளும் வரட்டு கவுரவங்களும் நிறைந்த அரசாங்க உத்தியோகம் நம்மை ஆணவப் படுத்தி விடுகிறது. நான் ஒன்றுமில்லாத குப்பை என்பதை இன்றும் நினைவூட்டும் அந்தத் தம்பி வாழ்க.**

**நமது படிப்போ, பதவியோ, செல்வமோ, சொத்துக்களோ நமக்கு கடைசி வரை உதவாது. அன்பு காட்டுவோம், அனைவரையும் நேசிப்போம். விட்டுக் கொடுப்போம், தாழ்ந்து போவோம். மகிழ்ச்சி என்றும் நிலைக்கும்.**

மற்றவர்களுக்கு உதவி செய்ய இறைவன் நமக்கு வாய்ப்பளிக்கிறார். இதில் எனது முயற்சி என்று சொல்லிக்கொள்ள ஏதுமில்லை . நமது கடமையைச் சரியாக செய்வதற்குத்தான் அரசாங்கம் சம்பளமும் பல சலுகைகளும் வழங்குகிறது.

என்ன நேர்ந்தாலும், நியாயத்தை நிலை நாட்டத் தவறக்கூடாது என்பதே காவல் துறை அதிகாரிகளின் எண்ணமாக, செயலாக இருக்க வேண்டும். ஆனால் அந்த என்னுடைய உயரதிகாரி எனக்கு நிரந்தரப் பகையாளியானது எனது பெரிய வருத்தம், இன்று வரை.

**திரு.சாம்பிரியகுமார் ADSP அவர்களின் முகநூல் பதிவிலிருந்து...**



# முகம் தெரியாதவரிடம் முகநூல் நட்பு !

வளர்ந்துவரும் அறிவியல் தொழில் நுட்பங்கள் மனிதனின் வளர்ச்சிக்கு பயன்படுகிறது. தவறான பயன்பாட்டால் அதே மனிதனை அழிக்கவும் பயன்படுகிறது. அறிவியல் தொழில்நுட்பம் வாட்ஸ்அப், பேஸ்புக், டிவிட்டர் என பல்வேறு வழிகளில் மனிதனின் தேவைகளை பூர்த்தி செய்யும் கருவியாக பயன்படுகிறது என்றாலும், சிலரை பாழ்படுத்தும் கருவியாகவும் அது பயன்படுகிறது. அறிவியல் தொழில்நுட்பத்தினை தவறாக பயன்படுத்துவதால், அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள்தான். முகமே தெரியாத நபருடன் முகநூல் (facebook) நட்பை ஏற்படுத்திக் கொள்வதால் பெண்களுக்கு ஏற்படுகின்ற சங்கடங்கள் அவர்களின் உயிருக்கே உலை வைத்து விடுகிறது.

முகநூல் மூலம் பழகிய பெண் அந்தமுனையில் உள்ள மனிதனின் தகுதி தராதரம் அறியாமல் தன்னை இழந்துவிட்டு காவல்துறையிடம் ஓடுகிறார்கள். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். என்று சொல்லி பழகிவிட்டு திருமண நேரத்தில் அவர்கள் போலி என தெரிய வரும்போது பெண்கள் மனமுடைந்து போகிறார்கள். இப்படி முகநூலை பயன்படுத்தும்போது மிகுந்த கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டியது ஒவ்வொரு பெண்ணின் கடமையாகும்.

தனக்கு தொல்லை தருபவர் என்று தெரிந்த பிறகு அவரோடு முகநூலில் தொடர்வதை நிறுத்தி விட வேண்டும். மேலும் தங்களுக்கு சம்மந்தமில்லாத நபர்கள் வெளியிடும் பதிவுகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டாம். அதில் கமெண்ட் போடாமல் இருப்பது மிக முக்கியம். என்னதான் சொன்னாலும் இந்த காதில் அந்த காதில் விட்டுவிட்டு செல்பவர்கள் உண்டு... அவர்களுக்கு பட்டால்தான் புத்தி வரும்.

# முதல் குடிமகன் தேர்தல்



பா.ஜ.க. தலைவர் அமித் ஷா மற்றும் பிரதமர் மோடியுடன் ராம்நாத் கோவிந்த் (இடது)

**இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு மக்களுக்காக மக்களால் நடத்தப்படுகின்ற குடியரசு உருவானது. அந்த குடியரசுக்கு தலைவராக முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் டாக்டர்.ராஜேந்திரப் பிரசாத்.**

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் பதவிக்காலம் இம்மாதம் முடிவடைகிறது. இதையடுத்து வருகிற 17-ம் தேதி 14 வது புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க தேர்தல் நடக்கிறது. இதற்கான ஏற்பாடுகளில் எல்லா மாநில அரசுகளும் இறங்கியுள்ளன. பாஜக சார்பில் பீகார் முன்னாள் கவர்னர் ராம்நாத் கோவிந்த் நிறுத்தப்பட்டு உள்ளார். காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சார்பில் நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகர் மீராகுமார் போட்டியிடுகிறார். இரு வேட்பாளர்களும் களத்தில் உள்ளதால் வாக்குப்பதிவு நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஜனாதிபதி தேர்தல் சூடுபிடித்துள்ளது. வேட்பு மனு தாக்கல் தொடங்கிவிட்ட நிலையில் அனைத்து மாநிலங்களிலும் உள்ள எம்.பி. எம்.எல்.ஏ.க்கள் ஜனாதிபதி தேர்தலில் ஓட்டு போடுவதற்கான முன் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.




தமிழ்நாட்டில் ஜனாதிபதி தேர்தலுக்கான தேர்தல் அதிகாரியாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு கீழ் தேர்தல் நடத்தும் அலுவலர்களாக சட்டசபை செயலாளர் கே. பூபதி, இணை செயலாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக வாக்கு சீட்டு தயாரிப்பது, ஓட்டு பெட்டிகளை வரவழைப்பது குறித்து தலைமை தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி சட்டசபை செயலாளர் பூபதியை அழைத்து ஆலோசனை நடத்தினார்.

சபாநாயகர் அறை ஜனாதிபதி தேர்தலுக்காக எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் சபாநாயகர் அறைக்கு அருகில் உள்ள குழுக்கள் கூட்ட அரங்கில் ஓட்டு போட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள எம்.பி.க்கள் இங்கேயும் ஓட்டு போடலாம். இங்கு வர முடியாவிட்டால் டெல்லி நாடாளுமன்றத்திலும் வாக்களிக்கலாம்.



சோனியா காந்தியுடன் மீராகுமார்

ஆனால் எங்கு வாக்களிப்பது என்பதை முன்கூட்டியே தேர்தல் அதிகாரியிடம் தெரிவித்து அதற்கான அனுமதியை பெற வேண்டும். வாக்குப்பதிவு முடிந்ததும் ஓட்டுப்பெட்டி சீல் வைக்கப்பட்டு பலத்த பாதுகாப்புடன் விமானத்தில் டெல்லிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு எண்ணப்படும்.

முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு தமிழகத்தில் பா.ஜ.க.சார்பில் நிறுத்தப்படும் குடியரவு தலைவர் வேட்பாளருக்கு அதிக ஆதரவு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. மூன்றுஅணியாக கருத்து வேறுபாட்டால் பிரிந்திருந்தாலும் ஒரே நிலையில் பா.ஜ.க. வேட்பாளர் ராம்நாத் கோவிந்த் அவர்களை ஆதரிக்க அ.தி.மு.க. முடிவு செய்துள்ளது.

## கருஞ்சீரகம் BLACK SEED !!!

சமகாலத்தில் எல்லோரையும் மிரட்டும் வியாதியாக இருப்பது புற்றுநோய். அதிலும் உள்ளுறுப்புகளில் வரும் புற்றுநோயானது எவ்வித அறிகுறியையும் காட்டாமல் இரகசியமாய் வளர்ந்து மற்ற உறுப்புகளையும் முடக்கும் போதுதான் தெரியவரும். ஆனால் அப்போது அதை குணப்படுத்த முடியாத அளவு நிலைமை கைமீறி போய் இருக்கும்.

குறிப்பாக கணைய புற்றுநோய் (Pancreatic cancer) அத்தனை எளிதில் அறிகுறியும் தென்படாமல், வந்தபின் குணப்படுத்த மிகவும் கடினமான வியாதி. சர்க்கரை நோயுடன் கர்ப்ப காலங்களில் புகைக்கும் பழக்கம் கொண்ட பெண்களுக்கு பிற்காலத்தில் இந்த புற்றுநோய் வரும் வாய்ப்பு உண்டு. அதோடு நம்மில் பலர் புகைப்பழக்கத்தால் தாமே இந்த கணைய புற்றுநோயை வரவழைத்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட மருத்துவத்திற்கு சவாலான கணைய புற்றுநோயை கட்டுப்படுத்த கருஞ்சீரகம் பெரும் பங்கு வகிக்கிறது.

உடலுக்கு தேவையான பிராணசக்தி குறையும் போது உடலுக்குள் உறைந்திருக்கும் புற்றுநோய் கலங்கள் பல்கி பெருகி வளர்ச்சி அடைகின்றன. கருஞ்சீரகம் உடலுக்கு தேவையான பிராண சக்தி, எதிர்ப்பு சக்தியை பெருக்குவதுடன், இயற்கை நச்சுயிரிப் பெருக்கத் தடுப்புப் பொருளாகவும் (natural interferon), எலும்பு மஜ்ஜை உற்பத்தி சீராக இயங்க வைக்கவும், கொலஸ்ட்ரால் அளவை சமன் செய்யவும் பேருதவி புரிகிறது.

மேலும் இதில் உடலுக்கு தேவையான பலவித அமிலங்களான மிரிஸ்டிக் அமிலம், பாமிற்றிக் அமிலம், ஸ்டீரிக் அமிலம், ஒலீயிக் அமிலம், லினோலியிக் அமிலம், ஒமேகா6 ஃபேட்டி அமிலம், ஃபோலிக் அமிலம் போன்றவற்றை உள்ளடக்கியது. மற்றும் புரதம், கல்சியம், இரும்புச்சத்து, காப்பர், ஜிங்க், பாஸ்பரஸ், விட்டமின்கள் $B_1$, விட்டமின்கள் $B_2$, விட்டமின்கள் $B_3$ போன்ற சத்துக்களை உள்ளடக்கிய அறிய மூலிகையே இந்த கருஞ்சீரகம்.

**கருஞ்சீரகம்**





1. கசகசா (poppy seeds) சில தின்பண்டங்களில் ருசிக்காக மட்டும் சேர்க்கப்படுவதில்லை. இது தேகத்திற்கு குளிர்ச்சி தரும் மருத்துவ குணம் கொண்டது. எச்சரிக்கை இதை அதிகம் உண்டால் மயக்கம் வரும்.

2. ஓயாது அழும் குழந்தைகளுக்கு கசகசாவை மைபோல் அரைத்து, குழந்தையின் தொப்புளைச் சுற்றித் தடவினால் அழுகை குறையும்.

3. 10 கிராம் கசகசாவுடன் ஒரு பிடி வேப்பிலை, ஒரு துண்டு கஸ்தூரி மஞ்சள் இவைகளை சேர்த்து அரைத்து அம்மை விழுந்த இடத்தில் தடவினால் அம்மை வந்த தடம் மறைய தொடங்கும்.

4. வயிற்றுப்போக்கு ஏற்படும்பொழுது சிறிதளவு கசகசாவை எடுத்து வாயில் போட்டு நன்றாக மென்று கொஞ்சம் தண்ணீர் குடித்தால் வயிற்றுப்போக்கு குறையும்.

## கசகசா மருத்துவகுணங்கள் !!!

கருஞ்சீரகம்

- தோல் நோயை குறைப்பதில் கருஞ்சீரகம் முக்கிய பங்கு வகிக்கிறது.
- பசியைத் தூண்டவும் கருஞ்சீரகம் பயன்படுகிறது. ஜீரணத்தை சீர்படுத்தும்.
- வயிற்றுப் போக்கை குணப்படுத்தும்.
- கருஞ்சீரகம் புழுக்கொல்லியாக செயல்படும். வாந்தியைத் தடுக்கும். இதய வலியை குறைக்கும்.
- சிறிதளவு கருஞ்சீரகத்தை பசும்பால் விட்டு அரைத்து முகத்தில் பூசி ஊறிய பின் கழுவி வர முகப்பரு மறையும்.
- கருஞ்சீரகத்தை நீர் விட்டு அரைத்து, நல்லெண்ணையில் குழைத்து கரப்பான், சிரங்கு ஆகியவற்றில் பூசி வர குணம் தெரியும்.
- கருஞ்சீரகத்தை தேன் விட்டு அரைத்து பிரசவித்த பின் ஏற்படும் வலிக்குப்பூசிட வலி மாறும்.
- கருஞ்சீரகத்தை அரைத்து தேமல் மேல் பூசி வர தேமல் சிறிது சிறிதாக மாறும்.
- கருஞ்சீரகத்தை வறுத்து காடி விட்டு அரைத்து சொறி, தேமல் மேல் பூசி வர தேமல், சொறி மறையும்.
- கருஞ்சீரக பூகருஞ்சீரகப்பொடி, மல்லிப்பொடி இரண்டையும் பாலில் கலந்து சாப்பிட அஜீரணம் மாறும்.
- கருஞ்சீரகப் பொடியை தயிரில் கலந்து சாப்பிட அஜீரணம் மற்றும் வாயு உற்பத்தி மாறும்.
- *கருஞ்சீரகத்தை எருமைப்பால் விட்டு அரைத்து முகத்தில் தடவி வர முகப்பரு மாறும்.*
- கருஞ்சீரகத்தை வெற்றிலை சாறு விட்டு அரைத்து காது, கன்னப் பகுதியில் ஏற்படும் வீக்கம் மேல் பற்று போட வீக்கம் மறையும்.
- கருஞ்சீரகத்தை ஸ்வீஸிமீணீக்ஷீல் வேகவைத்து வாய் கொப்புளித்தால் பல் வலிக்கு நல்ல பலன் கிடைக்கும்.
- கருஞ்சீரக எண்ணெய் பக்கவாத நோய்க்குச் சிறந்த மருந்தாகும்.
- கருஞ்சீரகத்தைத் தூளாக்கி தேனில் கலந்து வெந்நீருடன் சாப்பிட்டால் சிறுநீர்பை கல்லைக் கரைத்து சிறுநீர் அடைப்பை அகற்றும்.
- கருஞ்சீரகத்தை அரைத்துப் பத்துப் போட்டால் தலைவலிக்கு நல்லது
- கருஞ்சீரகத்தை வறுத்துத் தூளாக்கி நல்எண்ணெயில் ஊறவைத்துப் பிறகு மூக்கில் சொட்டுகள் விட்டால் கடுமையான ஜலதோஷம் நீங்கும்.
- இது தலைமுடிக்கு குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடியது. கருஞ்சீரகத்தை 4 டீஸ்பூன் எடுத்துக்கொண்டு லேசாக வறுக்கவும். 250 மி.லிட்டர் நல்லெண்ணெயைக் காய்ச்சி அதில் போட்டு வேக விடவும். (எண்ணெய் புகை வரம்படி காயக்கூடாது). பின் ஆறியதும், இந்த எண்ணெயை வடிகட்டி வைத்துக் கொண்டு எவ்வளவு சாப்பிட வேண்டும்?

**அறுசுவை துவர்ப்பு, இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கசப்பு, மற்றும் உவர்ப்பு ஆகியவையே ஆறு வகைச் சுவை.**

நம் உடல் ஆரோக்கியத்திற்கு அறுசுவையும் சம அளவில் தேவை. அதிகமாகவோ குறைவாகவோ சாப்பிடும் போது தான் உடலில் பிரச்னைகள் ஏற்படுகிறது என்கிறார்கள் ஆயுர்வேத மருத்துவர்கள். அறுசுவைக்கும் நம் உணவில் இடம் கொடுத்து அதன்மூலம் ஆரோக்கிய வாழ்க்கைக்கு வழி வகுத்துக்கொள்வோம்.

**இனிப்பு தசையை வளர்க்கின்றது**

பழவகைகள், உருளைக் கிழங்கு, காரட் போன்ற கிழங்கு வகைகள், அரிசி, கோதுமை போன்ற தானியங்கள் மற்றும் கரும்பு போன்ற தண்டு வகைத் தாவரங்களிலும் இனிப்புச் சுவை அதிக அளவில் அடங்கியுள்ளது.

**புளிப்பு கொழுப்பினை வழங்குகின்றது**

எலுமிச்சை, புளிச்ச கீரை, இட்லி, தோசை, அரிசி, தக்காளி, புளி, மாங்காய், தயிர், மோர், நார்த்தங்காய் போன்றவற்றில் அதிகம் உள்ளது.

**கார்ப்பு எலும்புகளை வளர்க்கின்றது**

வெங்காயம், மிளகாய், இஞ்சி, பூண்டு, மிளகு, கடுகு போன்றவற்றில் அதிகப்படியான காரச்சுவை அடங்கியுள்ளது.

**உவர்ப்பு உமிழ்நீரைச் சுரக்கச் செய்கின்றது**

கீரைத்தண்டு, வாழைத்தண்டு, முள்ளங்கி, பூசணிக்காய், சுரைக்காய், பீர்க்கங்காய் போன்றவற்றில் அதிகமாய் இருக்கின்றது.

**துவர்ப்பு இரத்தத்தைப் பெருக்குகின்றது**

வாழைக்காய், மாதுளை, மாவடு, மஞ்சள், அவரை, அத்திக்காய் போன்ற காய் வகைகளில் அடங்கியுள்ளது.

**கசப்பு நரம்புகளை பலப்படுத்துகின்றது**

பாகற்காய், சுண்டக்காய், கத்தரிக்காய், வெந்தயம், பூண்டு, எள், வேப்பம்பூ, ஓமம் போன்றவற்றில் இந்த சுவை மிகுதியாய் உள்ளது.

நம் சித்த மருத்துவர்களும், ஆயுர்வேத* மருத்துவங்களும், உணவு முறைகளும் இதனை அடிப்படையாகக் கொண்டே இருந்துவந்தது. உடல் தாதுவைப் பெருக்க, சமன் செய்ய அதற்கு ஏற்றவாறு உணவு வகைகளைத் தயாரித்து வந்தனர். இதனைக் கொண்டுதான் "உணவே மருந்து, மருந்தே உணவு" என்று சொன்னார்கள்

**திருமதி.சுஜாதா மூர்த்தி**

**இன்றைய சூழலில் சாப்பிடக் கூட நேரமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறோம். அப்படியே நேரம் கிடைத்தால்கூட, முறையாக உட்கார்ந்து சாப்பிடாமல் ஏனோதானோவென்று அவசர அவசரமாக சாப்பிடுகிறார்கள்.இதனால் ஏற்படும் விளைவுகளை விளக்குகிறது இந்த கட்டுரை.**

எவ்வளவு சாப்பிட வேண்டும்பலருக்கு இந்த விஷயத்தில் மிகப்பெரிய சந்தேகம் எப்பொழுதுமே இருக்கும், காலையில் எவ்வளவு சாப்பிட வேண்டும், மதியம் எவ்வளவு சாப்பிட வேண்டும், இரவு எவ்வளவு சாப்பிட வேண்டும் என்று இந்த அளவில் குழப்பம் ஏற்படும்பொழுது நாம் ஒரு மருத்துவரிடம் செல்கிறோம். குறிப்பாக டயட்டீசியனிடம் dietician சென்றால் அவர் நமக்கு அறிவுரை கூறுவார். காலையில் நான்கு சப்பாத்தியும் ஒரு கப்புத் தயிரும் சாப்பிடுங்கள், இரவு ஐந்து இட்லி சாப்பிடுங்கள், மதியம் 750 மில்லி கிராமம் சாப்பிடும் 350 மில்லி லிட்டர் குழம்பும் சாப்பிடுங்கள் என்று எழுதிக் கொடுப்பார். சாப்பிடும்பொழுது மில்லி கிராம், மில்லி லிட்டர் பார்த்தா சாப்பிட முடியும். சாப்பிடும்பொழுது நாம் பக்கத்தில் தராசு வைத்துக் கொள்ள முடியுமா? ஒன்று செய்யுங்கள், இனிமேல் மதியம் சாப்பாடும் பொழுது பக்கத்தில் தராசு வைத்துக் கொள்ளுங்கள், 750 மில்லி



கிராம் சாப்பாட்டை அளந்து தட்டில் போடுங்கள், இது சாத்தியமாகுமா?

"மருத்துவர்கள் 4 சப்பாத்தி காலையில் சாப்பிடுங்கள் என்று எழுதி கொடுக்கிறார்களே, நீங்கள் வீட்டில் எல்லா வேலையும் செய்யும் பெண்மணியா? அல்லது எல்லா வேலைக்கும் ஆள் வைத்துக் கொண்டு டிவி பார்த்துக் கொண்டு சும்மா இருக்கும் பெண்மணியா? என்று கேட்டார்களா? டயட் எழுதி தருவதற்கு முன்பாக நீங்கள் கூலி வேலை செய்யும் நபரா? அல்லது கம்ப்யூட்டர் இன்ஜீனியரா என்று கேட்டார்களா? ஒவ்வொரு மனிதனுக்கும் வேலையின் அளவு, உடல் எடை, மனதில்தெம்பு, சுபாவம், காலநிலை, இயற்கையின் அளவு முறை, நாடு, வயது, இடம், ஊர், ஆகியவற்றைப் பொறுத்து உணவின் அளவு மாறும். ஒரு நாள் கட்டிட வேலைக்குச் சென்று நாள் முழுவதும் கற்களைத் தூக்கும் ஒருவர் எவ்வளவு சாப்பிட வேண்டும் என்று யோசியுங்கள், அதே நபர் அடுத்த நாள் தனது நண்பரின் A/C காரில் பயணம் செய்யும்பொழுது அவர் எவ்வளவு சாப்பிட வேண்டும்? உலகத்தில் யாருமே இன்று செய்வதைப் போல அடுத்த நாள் வேலை செய்வது கிடையாது, அப்படி இருக்கும்பொழுது ஒருவர் எவ்வளவு சாப்பிட வேண்டு மென்பதை முதலிலேயே எழுதிக் கொடுக்க முடியுமா? உலகத்தில் எவ்வளவு பெரிய சைன்டிஸட்டாக இருந்தாலும் எவ்வளவு பெரிய மருத்துவராக இருந்தாலும் எவ்வளவு பெரிய ஞானியாக இருந்தாலும் அடுத்த வேளை எவ்வளவு

சாப்பிட வேண்டும் என்பதை அவருக்கு அவரே எழுதிக் கொடுக்க முடியாது. இப்படி நாம் என்ன சாப்பிட வேண்டும் என்பதை நமக்கே கூற முடியாத நிலையில் மருத்துவர்கள் நோயாளிகளுக்கு எப்படி கூற முடியும்? தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் எவ்வளவு சாப்பிட வேண்டும் என்ற அளவை உலகத்தில் வேறு யாராலும் கொடுக்க முடியாது. ஏன்? உங்களுக்கே தெரியாது.

மருத்துவர்கள் காலையில் 4 சப்பாத்தி சாப்பிடுங்கள் என்று கூறுகிறார்களே உங்கள் வீட்டுச் சப்பாத்தி எந்த அளவு இருக்குமென்று கேட்டார்களா? ஒரு சில வீட்டுச் சப்பாத்தி கெட்டியாக, பெரியதாக இருக்கும். ஒன்று சாப்பிட்டாலே போதும். ஒரு சில சப்பாத்தி அப்பளம் போல இருக்கும். பத்து சாப்பிட்டாலும் வயிறு நிறையாது. இப்படி இருக்கையில் எப்படி நான்கு சப்பாத்தி சாப்பிடுங்கள் என்று எழுதி கொடுக்க முடியும்? ஒரு கப் தயிர் சாப்பிடுங்கள் என்று கூறுகிறார்களே, உங்கள் வீட்டு கப் என்ன அளவில் உள்ளது என்று அவர்களுக்குத் தெரியுமா? சற்று சிந்தியுங்கள், இரவு 5 இட்லி சாப்பிடுங்கள் என்று எழுதி கொடுக்கிறார்களோ, உங்கள் வீட்டு இட்லி எடை அவருக்குத் தெரியுமா? தயவு செய்து மற்றவர்கள் எழுதிக் கொடுக்கும் அளவு முறையில் தயவு செய்து சாப்பிட வேண்டாம். இது நோயைப் பெரிது படுத்துமே தவிர நோயைக் குணப்படுத்தாது.

சரி எவ்வளவு தான் சாப்பிட வேண்டும் என்ற அளவை எப்படிக் கண்டுபிடிப்பது. அதற்கு சுலபமாக வழிமுறை இருக்கிறது. பசி எடுத்தால் மட்டுமே சாப்பிட வேண்டும், சாப்பிடும் பொழுது கவனத்தை உணவில் வைத்துச் சுவையை இரசித்து, ருசித்து சாப்பிட்டால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் நமக்கு சாப்பிடப் பிடிக்காது. முதல் முறை வாயில் எடுத்து வைக்கும் பொழுது பிடித்த அதே உணவு எப்பொழுது நமக்குப் பிடிக்க வில்லையோ, போதும் என்று அர்த்தம். வழக்கமாக நீங்கள் காலையில் 10 இட்லி சாப்பிடும் நபராக நீங்கள் இருந்தால் கவனத்தை இட்லியின் மேலும், இட்லியிலுள்ள சுவையின் மீது கவனம் வைத்துச் சாப்பிட்டுப் பாருங்கள், நான்கு இட்லி சாப்பிட்ட பிறகு ஐந்தாவது இட்லியைப் பார்த்தால் உங்களுக்குச் சாப்பிடப் பிடிக்காது. எப்பொழுது பிடிக்கவில்லையோ உங்கள் அளவு முடிந்து விட்டது என்று அர்த்தம்.

கவனத்தை உணவில் வைத்துச் சாப்பிடும்பொழுது நமக்கு அளவு தெரியும், கவனத்தை செல்போனிலோ, TV-யிலோ அல்லது பேச்சிலோ வைத்துச் சாப்பிடும் பொழுது நமக்கு அளவு தெரிவதில்லை. எனவே தயவு செய்து சாப்பிடும்பொழுது கவனத்தை உணவிலும், சுவையிலும் வைத்துச் சாப்பிட்டுப் பாருங்கள். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் நம்மால் சாப்பிட முடியாது. எனவே நமது சிகிச்சையில் எவ்வளவு சாப்பிட வேண்டும் என்பதற்கு மில்லிகிராம், கிலோ கிராம், தராசு போன்ற அளவு முறைகள் தேவையில்லை. பசி எடுத்தால் சாப்பிட வேண்டும். ருசித்து சாப்பிட வேண்டும். மனதிற்கு எப்பொழுது போதுமென்று எண்ணம் ஏற்படுகிறதோ அப்பொழுது நிறுத்த வேண்டும். எனவே ஆசை தீர சாப்பிடுங்கள். கொஞ்சம் அதிகமாக சாப்பிட்டால் ஒரு தவறும் கிடையாது. பசி கொஞ்சம் தள்ளிப் போகும். அவ்வளவுதான். குறைவாகச் சாப்பிட்டால் ஒரு தவறும் கிடையாது. நமக்கு சீக்கிரமாக பசித்து விடும். எனவே தயவு செய்து சாப்பிடும்பொழுது அளவு பார்க்காதீர்கள். உங்கள் மனதிற்குப் பிடித்த அளவு ஆசை தீர சாப்பிடுங்கள். ஆனால் ஒரேயொரு விஷயத்தை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். மீண்டும் பசி எடுக்கும் வரை வேறு எதையும் சாப்பிடக்கூடாது.

எனவே, நமது சிகிச்சை முறையில் பசி எடுத்தால் சாப்பிட வேண்டும். இரசித்து, ருசித்து ஆசை தீர சாப்பிட வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள் யார், யார் வீட்டில் 80 வயதிற்கு மேல் தாத்தா, பாட்டி ஆரோக்கியமாக இருக்கிறார்களோ அவர்கள் கண்டிப்பாக எந்த உணவையும், எந்தச் சுவையும் வேண்டாமென்று ஒதுக்கியிருக்க மாட்டார்கள். சுவை, சுவையாக வித விதமாக மனசுக்குப் பிடித்த உணவுகளைச் சாப்பிடுவது மூலமாக நாம் ஆரோக்கியமாக இருக்க முடியுமே தவிர நோய்கள் வராது, எனவே சுவையைப் பற்றியும். உணவைப் பற்றியும் தெரியாத சில மருத்துவர்கள் கூறும் தவறான விதிகளை தயவு செய்து கடைபிடிக்க வேண்டாம். வாழ்வோம் ஆரோக்கியமாக!!

தமிழர்களின் கலாச்சாரங்களில் முக்கியமானது சம்மணமிட்டு அமர்ந்து சாப்பிடுவது. இப்போதெல்லாம் டைனிங் டேபிள் வீட்டுக்கு வாங்குவது ஒரு அத்தியாவசிய தேவை போல் ஆகிவிட்டது. விருந்தினர்களை அதில் உட்காரவைத்து பரிமாறுவதுதான் நாகரீகம் சௌகரியம் என ஆகிவிட்டது.

முன்பெல்லாம் வாழை இலையில் தரையில் பரிமாறுவதுதான் கௌரவம். ஆனால் இப்போது டைனிங் டேபிள் இது சரியா தவறா..? முதலில் முன்னோர்கள் இப்படி சம்மணமிட்டு சாப்பிட்டதின் நோக்கமென்ன?

சாப்பிடும் பொழுதாவது நாம் காலை மடக்கி அமர்ந்து தான் சாப்பிட வேண்டும். சாப்பிடும் பொழுது காலைத்தொங்க வைத்து அமர்வதனால் ரத்த ஓட்டம் வயிற்றுப் பகுதிக்குச் செல்லாமல் காலுக்கே அதிகமாகச் செல்கிறது. எனவே ஜீரணம் தாமதமாகிறது. காலை மடக்கி சம்மணமிட்டு அமர்ந்து சாப்பிட்டால் சாப்பிட, சாப்பிட, சாப்பாடு ஜீரணமாகிவிடும். ஏனென்றால் கீழே ரத்த ஓட்டம் செல்லாமல் முழு சக்தியும் வயிற்றுப் பகுதிக்குச் செல்லும் பொழுது நமக்கு ஜீரணம் நன்றாக நடைபெறுகிறது.எனவே தான் சம்மணமிட்டு அமர்ந்து சாப்பிடும் படி வலியுறுத்தப்பட்டது.....!

# சாப்பிடுவதில் இத்தனை சங்கதிகளா?

## ஆன்மிகம் தெளிவோம்!

சிவமனோகர்



# அஷ்டமியில் எந்த காரியமும் செய்யக்கூடாது என்கின்றார்கள். ஆனால், அஷ்டமியில் பைரவரை வணங்கினால் நல்லது நடக்கும் என்கிறார்களே!

**பதில்:** நட்சத்திரத்தை பிறப்புக்கும், திதியை இறப்புக்கும் நம் பெரியோர்கள் பயன்படுத்தினர். அஷ்டமி என்பது எட்டாவதாக வரும் திதி, இதற்கு காரண தெய்வம் காளிதேவி பைரவர் மனித வாழ்வில் வரும் கஷ்டங்களை தாங்கும். சக்தியை தரும் தெய்வங்கள் அஷ்டமி என்பது இறைவணக்கத்திற்கு உரிய நாள். இந்த நாளின் இறைவனை வணங்குவது உடனே பலன் கிடைக்கும் என்பது உறுதி. இந்த உலகில் உள்ள சந்தோஷங்களை நாம் பெறுவதற்கு, நம் முன்னோர்கள் மையப்புள்ளியாக வைத்திருக்கும். தெய்வம்தான் பைரவர். இந்த பைரவரை இந்த அஷ்டமி திதியில் வணங்கும்போது நம்முடைய வேண்டுதல் உடனே கைகூடும். பொதுவாக அஷ்டமியில் ஒரு செயலை செய்தால் அந்த செயலை நாம் திரும்பத்திரும்ப செய்ய வேண்டிய சூழல் உருவாகும். எனவேதான்... எந்த காரியமும் செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இறைவனை வணங்குவதற்கும் போற்றுவதற்கும் உரிய நாள் அஷ்டமி என்பது திதிகளில் உச்சம்.

## கேள்வி : நான் ரொம்ப நல்லவன், எல்லாருக்கும் நல்லதுதான் செய்யுறேன். ஒழுங்க சாமி கும்பிடுறேன், இப்படி இருந்தும் எனக்கு மட்டும் சாமி ஏன் இவ்வளவு கஷ்டத்தை கொடுக்குது ?

பதில் : கஷ்டம், பிரச்சனை என்பது ஒரு பொதுவான வார்த்தை எந்த நிகழ்வுகளோடு இந்த பிரச்சனை சேருகின்றதோ அது அந்த பிரச்சனை ஆகின்றது. பிரச்சனைகளின் பிரதிபலிப்பு அனைத்துமே கோள்களின் தன்மை பொருத்தே அமையும். அதாவது சூரியன் சரியில்லை என்றால் அரசு சம்மந்தமான பிரச்சனை, சந்திரன் சரியில்லை என்றால், மனக்குழப்பம் அதிகரிக்கும். புதன் சரியில்லை என்றால் நம்முடைய புத்திசாலிதனமே நமக்கு ஆப்பாக வரும். குருசரியில்லை

**வளம் காட்டும் சோதிட வல்லுநர்**
**சிவமனோகரன்**

என்றால், பதவிபோகும். மரியாதை இருக்காது, சுக்கிரன் சரியில்லை என்றால் கண்திருஷ்டி அதிகமாகும். சனி சரி யில்லை என்றால் பொது ஜனத்தொடர்பில் பாதிப்பு வரும். ராகு சரி இல்லை என்றால் வாயுத்தொல்லை நரம்பு தளர்ச்சி வரும். கேது சரியில்லையென்றால் திரும்பிய பக்கமெல்லாம் எதிர்ப்பு வரும். இப்படித்தான் கோச்சாரம், திசை பலன், புத்திபலன், அந்தரம்பலம் மூலமாகதான் மனிதனுக்கு பிரச்சனை வருகின்றதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இது நல்ல மனிதனுக்கும் வரும். கெட்ட மனிதன் என்று சொல்லப்படுகின்றவர்களுக்கும் வரும். நல்லது கெட்டது அனைத்திற்கும் கிரகங்கள் தான் காரணம்.

## சந்திராஷ்டமம் என்றால் என்ன ? அன்று எல்லாம் ஏடாகூடமாக நடக்கிறது ஏன் ?

பதில் : நம்முடைய ராசியிலிருந்து சந்திரன் எட்டாவது ராசியில் சஞ்சரிக்கும் நாளே சந்திராஷ்டமம். பொதுவாக சந்திரன் மனோகாரகன். அவன் எட்டில் மறையும்போது நம்முடைய மனம் குழம்பி போய் இருக்கும். எனவே எந்த முடிவெடுத்தாலும் அதில் தெளிவு என்பது இருக்காது. நாம் ஒரு நிலையில் இல்லாத காரணத்தால், சூழ்நிலை குழம்புவது போல் தோன்றும். மேலும் உடல்நிலை பாதிக்கப்படும். எனவேதான் சந்திராஷ்டமம் உள்ள நாளில் சிவனை வணங்கினால் குழப்பத்திலிருந்து தெளிவு பெற முடியும். மனித செயல்பாட்டிற்கு முக்கியக் காரணம் மனமே. அந்த மனதிற்கு மூலம் சந்திரனே... சந்திரன் நன்றாக இருந்தால் மனம் அமைதியாக இருக்கும்.

## சனிப்பிரதோஷம் ஏன் சிறப்பாக பேசப்படுகிறது ?

திரேதா யுகத்தில் இறைவன் நேரடியாக மக்களோடு மக்களாக வாழ்ந்திருக்கிறான். அந்தக் காலத்தில் மக்களுடைய எல்லா குறைகளையும் இறைவன் மக்களிடையே நேரடியாக கேட்டு அவர்களுக்கு தீர்ப்பு சொல்லிய நாள்தான் பிரதோசம் என்பது. அந்த குறைகளுக்கு தீர்ப்பு சொல்லும் நாளே சனிப் பிரதோசம். அதாவது சனிப் பிரதோஷம் என்பது தீர்ப்பு சொல்லும் நாள். பாவம் நீக்கும் நாள். சிவபெருமானின் தனிக்கருனை பெற்ற நாள்.

அடுத்த இதழில்...

# கட்டிடங்களை வரன்முறைப்படுத்த கெடு!

தமிழகத்தில் வேகமான நகர் வளர்ச்சி மற்றும் மக்கள் பெருக்கம் காரணமாக நகர்ப்பகுதிகளில் குறைந்த அளவே நிலங்கள் இருப்பதால் அதற்கான தேவை மிகவும் அதிகரித்துள்ளது. இதனால், நிலங்களின் விலை அதிகரித்துள்ளதுடன் அனுமதியற்ற கட்டிடங்களும் அதிகரிக்க வழிவகுத்துள்ளது. இதனை கருத்தில்கொண்டு, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அமலாக்க நடவடிக்கைகளை மேம்படுத்தவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

**2007**ம் ஆண்டு ஜூலை **1**ந்தேதி அன்றோ அல்லது அதற்கு முன்போ கட்டப்பட்டுள்ள விதிகள் மீறிய அனுமதி பெறாத கட்டிடங்களுக்கு விலக்கு அளிக்க கோரப்பட்டது. சென்னை பெருநகர பகுதிக்கான வளர்ச்சி விதிகள் மற்றும் நகர் ஊரமைப்புத் துறை கட்டுப்பாட்டு பகுதிகளுக்கான வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளிலிருந்து, சில நியாயமான வரம்புகள் மற்றும் பாதுகாப்பு அம்சங்களுக்கு குந்தகம் விளைவிக்காமல், நடைமுறை சாத்தியக்கூறுகளுக்கு இணங்க, விலக்களிக்க ஏதுவாக தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், **1971**ல் பிரிவு **113**சி இணைத்து உள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்காக, உரிய விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களை பரிந்துரைக்க நீதிபதி ராஜேஸ்வரன் தலைமையில் அரசு ஒரு குழுவை நியமித்தது. நீதிபதி ராஜேஸ்வரன் குழுவின் பரிந்துரைகள் கடந்த **13**ந்தேதி நடந்த அமைச்சரவை கூட்டத்தில் வைக்கப்பட்டு, ஒப்புதலும் பெறப்பட்டது.

இவ்விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களின் முக்கிய கூறுகள் வருமாறு:

* கட்டிடம் **2007**ம் ஆண்டு ஜூலை **1**ந்தேதி அல்லது அதற்கு முன்னர் கட்டி முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

* விமான போக்குவரத்து அமைச்சகத்தின் விதிமுறைகள், கடலோர பகுதி விதிமுறைகள், விமான படைத்தள விதிமுறைகள், ராணுவ விதிமுறைகள், மலையிடப்பகுதி பாதுகாப்பு விதிமுறைகள், தமிழ்நாடு நியூக்ளியர் நிறுவுதல் விதிமுறைகள் போன்ற விதி முறைகளுக்கு இணங்கி இருக்க வேண்டும்.

* பொது இடங்கள், சாலைகள், தெருக்கள், அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான இடங்கள், நீர்நிலைப்பகுதிகள், முழுமைத் திட்டம் அல்லது விரிவான வளர்ச்சி திட்டம் அல்லது புதுநகர் வளர்ச்சித் திட்டம் அல்லது ஒப்புதல் பெற்ற மனைப்பிரிவுகளில் உள்ள பூங்கா மற்றும் விளையாட்டு திடலுக்காக ஒதுக்கிய திறந்தவெளிப்பகுதி போன்ற இடங்களில், கட்டிய கட்டிடங்கள் இத்திட்டத்தின் கீழ் வரன்முறை செய்யப்படமாட்டாது.

* சென்னை பெருநகர் பகுதியில் நிலத்தடி நீர்பிடிப்பு பகுதி மற்றும் செங்குன்றம் நீர்ப்பிடிப்பு பகுதியிலுள்ள அனுமதியற்ற கட்டிடங்கள் வரன்முறைப்படுத்த இயலாது.

சாலை அகல தேவை, பக்க இடைவெளித்தேவை, தளப்பரப்பு குறியீடு தேவை, வாகன நிறுத்துமிடம் மற்றும் திறந்த வெளிப்பகுதி தேவை போன்ற திட்ட காரணிகள் குறித்து விதிவிலக்குகள், தீப்பாதுகாப்பு மற்றும் கட்டிட உறுதித்தன்மைக்கு உட்பட்டு, நீதிபதி ராஜேஸ்வரன் குழுவின் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

*இத்திட்டத்தின் கீழ் தங்களுடைய கட்டிடங்களை வரன்முறைப்படுத்த விரும்புவோர் வழக்கமான வளர்ச்சி கட்டணம், கூடுதலாக உள்ள தளப்பரப்பு குறியீடுகளுக்கு ஊக்க தளப்பரப்பு குறியீட்டு கட்டணம், வாகன நிறுத்துமிடம் குறைபாடு கட்டணம், திறந்தவெளிப்பகுதி விதிமீறல்களுக்கான கட்டணங்கள் செலுத்த வேண்டும். வரன்முறைப்படுத்துவதற்கான அபராத தொகையினை உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் கட்டணத்தின் குறிப்பிட்ட சதவீத அடிப்படையில்



அவர் அடைந்த தளப்பரப்பு குறியீட்டுக்கு ஏற்றவாறு செலுத்த வேண்டும்.

* 2007ம் ஆண்டு ஜூலை 1ந்தேதி அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ அனுமதியற்ற, விதிமீறல்களுடன் கட்டப்பட்ட அனைத்து தனியார் கட்டிடங்களின் உரிமையாளர்கள் மற்றும் கட்டிட அபிவிருத்தியாளர்கள் தங்கள் கட்டிடங்களை வரன்முறைப்படுத்த, இதற்கான கட்டணங்களை சுயமதிப்பீடு செய்து, இவ்விதிகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் அக்கட்டணங்களுடன் கட்டாயமாக இணையதளம் வழியாக விண்ணப்பிக்க வேண்டும்.

*இத்திட்டத்தின்கீழ் வரன்முறைப்படுத்த தகுதியற்ற கட்டிடங்களுக்கு குடிநீர், கழிவுநீர், வடிகால் இணைப்புகள் மற்றும் மின்சார இணைப்புகளை துண்டிக்கும் வகையிலும், இவ்வகை சொத்துக்களை பிற நபருக்கு விற்க தடைவிதிக்கும் வகையிலும், உரிய துறைகளான குடிநீர் வாரியம், மின்சார வாரியம், பதிவுத்துறை ஆகிய துறைகள் தத்தம் சட்டம் மற்றும் விதிகளில் உரியதிருத்தம் செய்யப்படும்.

நீதிபதி ராஜேஸ்வரன் குழு பரிந்துரையின் அடிப்படையில், அமைச்சரவையின் ஒப்புதல் பெற்று, உரிய விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களை அரசு அறிவிப்பு செய்துள்ளது. வளர்ச்சி விதிமுறைகள் மீறி கட்டப்பட்ட கட்டிடங்களை வரன்முறை செய்ய விரும்புவோர் தங்கள் கட்டிடத்திலுள்ள விதிமீறல்களை, இவ்விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள்படி, சுயமதிப்பீடு செய்து, 6 மாத காலத்திற்குள் இணைய வழி மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். இவ்வாறு அதில் கூற ப்பட்டு உள்ளது.


**ஆர்.குணசேகரன்**

# மித்ரா

சினி கோலிவுட்





இளைய தளபதி விஜய்யின் 61 வது படமான மெர்சல் படத்தை அட்லி இயக்குகிறார். இதனுடைய டீசர் வெளியான உடனே 10 லட்சத்திற்கும் அதிகமான ட்ரெண்ட் உருவாகி சாதனைப்படைத்திருக்கிறது.



சிம்பு நடிக்கும் AAA படம் ரசிகர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இல்லையென்று பத்திரிகையில் வந்த விமர்சனத்தைப் பார்த்து சிம்பு கவலைப்பட்டுள்ளார். இதெல்லாம் தனக்கு வேண்டாதவர்கள் கிளப்பிவிடும் புரளி என்றும் நண்பர்களிடம் சொல்லி வருகிறார். AAA என்பது அன்பானவன் அசராதவன் அடங்காதவன்.



தல அஜித் நடிக்கும் விவேகம் படம் வெளியாக உள்ள நிலையில் முதல் முறையாக ஹிந்தியிலும் வெளியாக உள்ளது. குறைந்தபட்சம் 2000 ஆயிரம் தியேட்டர்களிலாவது இந்தியா முழுக்க வெளியிட்டு சாதனைப் படைக்க உள்ளனர்.




**விவேகம் அஜித்**

விக்ரம் கவுதம் மேனன் கூட்டணியில் 'துருவ நட்சத்திரம்' படம் விறுவிறுப்பாக உருவாகி வருகிறது. இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது வெளிநாடுகளில் நடைபெற்று வருகிறது. தொடர்ந்து 22 நாட்கள் 4 நாடுகளில் இந்த படப்பிடிப்பை நடத்தவிருக்கிறார்களாம்.

பல்கேரியா, ஸ்லோவேனியா, துருக்கி, அபுதாபி ஆகியவற்றில் நடைபெறவிருக்கிறதாம். ஏற்கெனவே, இப்படத்தில் நடிப்பதாக அறிவித்திருந்த முக்கியமான 12 கதாபாத்திரங்களையும் உள்ளடக்கிய காட்சிகள் இந்த படப்பிடிப்பில் படமாக்கவுள்ளார்களாம்.

இப்படத்தில் கதாநாயகியாக ஐஸ்வர்யா ராஜேஷ், ரித்து வர்மா ஆகியோர் கதாநாயகிகளாக நடித்து வருகின்றனர். பார்த்திபனும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். சிம்ரன், ராதிகா, சதீஷ், வம்சி, திவ்யதர்ஷினி உள்ளிட்டோரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.



# மரகத நாணயம்

சமீப காலமாக பேய் படங்கள் தொடர்ந்து வெளிவந்து ரசிகர்களை ஈர்க்கிறது. அந்த வகையில் தற்போது வெற்றிகரமாக திரையில் ஓடிக் கொண்டிருக்கும் படம் ”மரகத நாணயம்”. ஆதி, ஆனந்தராஜ், மற்றும் நகைச்சுவை நடிகர்கள் நடித்துள்ள இப்படத்தில் கதாநாயகி நிக்கி கல்ராணி ஆண்குரலில பேசும் வித்தியாசமான பேயாக வருகிறார். த்ரில்லர் நிறைந்த காமெடி படமென்பதால் தியேட்டர் முழுக்க சிரிப்பலை.

**1903** ஆம் வருடம், ஜூலை மாதம் 15 ஆம் தேதி, காமராஜர் பிறந்தார். அவருக்கு குல தெய்வமான காமாட்சியம்மாளின் பெயரையே முதலில் சூட்டினார்கள்.தாயார் சிவகாமி அம்மாள் மட்டும், "ராஜா" என்றே அழைத்து வந்தாள். நாளடைவில் காமாட்சி என்ற பெயர் மாறி, 'காமராஜ்' என்று ஆனது.

மிகச் சிறந்த பேச்சாளரும் சிறந்த நாடாளுமன்ற வாதியும் ஆன சத்தியமூர்த்தி அவர்களைத் தான் காமராசர் தன் அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டிருந்தார். 1936ல்சத்தியமூர்த்தி பிரதேச காங்கிரசின் தலைவரான போது காமராசரைச் செயலாளராக ஆக்கினார். இருவரின் முயற்சியில் காங்கிரசு கட்சி நல்ல வளர்ச்சி கண்டு தேர்தல்களில் பெருவெற்றி பெற்றது. இந்தியா சுதந்திரம் அடைந்த செய்தி கேட்டு காமராசர் முதலில் சத்தியமூர்த்தியின் வீட்டுக்குச் சென்று அங்கு தான் தேசியக் கொடியை ஏற்றினார். அதேபோல் முதலமைச்சர் ஆனபோதும் முதலில் சத்தியமூர்த்தியின் வீட்டுக்குச் சென்று அவர் படத்துக்கு மாலை அணிவித்து விட்டுத்தான் தன் பணியைத் தொடங்கினார்.

1952 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் காமராஜர் சாத்தூர் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார். சுமார் பன்னிரண்டு ஆண்டுகாலம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்து தமிழ்நாட்டிலே காங்கிரஸ் பேரியக்கத்திற்குப் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தித் தந்தார்.

1954 ஆம் ஆண்டு காமராஜர் தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் ஆனார். குடியாத்தம் தொகுதியில் சட்டசபைக்குத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். காமராசர் அமைச்சரவை அமைத்த விதத்தில் சில நுட்பமான விஷயங்கள் உள்ளன:

மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே (8 பேர்) அமைச்சர்கள் இருந்தனர். தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சி.சுப்பிரமணியம், அவரை முன்மொழிந்த எம். பக்தவத்சலம் இருவரையுமே அமைச்சரவையில் சேர்த்திருந்தார்.

அவருடைய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த இன்னும் முக்கிய இருவர், ராமசாமி படையாச்சி, மாணிக்கவேலு நாயக்கர் ஆகியோர். இவர்கள் இருவரும் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டு தி.மு.க ஆதரவோடு வென்றவர்கள். (1952 தேர்தலில் தி.மு.க போட்டியிடவில்லை என்றாலும் அது சில வேட்பாளர்களை வெளிப்படையாக ஆதரித்தது. தி.மு.க.வின் திராவிட நாடு கொள்கையை ஆதரிக்கிறேன்; சட்டமன்றத்தில் திமுகவின் கொள்கைகளை எதிரொலிப்பேன்; தி.மு.க வெளியிடும் திட்டங்களுக்கு ஆதரவு பெருக்கும் வகையில் சட்ட மன்றத்தில் பணியாற்றுவேன் என்கிற நிபந்தனைகளுக்கு எழுத்து பூர்வமாகக் கையெழுத்திட்டுத் தருபவர்களுக்கு ஆதரவு அளித்தது திமுக. அப்படிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து காங்கிரசை எதிர்த்து வெற்றி பெற்று அமைச்சர் ஆனவர்கள் இந்த இருவரும்.)

அமைச்சரவையின் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம், பி. பரமேசுவரன் என்கிற அமைச்சர். அவருக்குத் தரப்பட்டிருந்த பொறுப்பு, தாழ்த்தப்பட்டோர் நலம் மற்றும் அறநிலையத் துறை.

அதிகம் படிக்காத பெருந்தலைவர் காமராஜர் கல்விக்குச் செய்த சாதனைகள்



# கற்பதற்கு வழி தந்த அற்புதத் தலைவர் காமராஜர்

எண்ணிலடங்காதவைகளாகும். ஏழை, எளியவர், உயர்ந்தவர், தாழ்ந்தோர், ஆக எல்லோருக்கும் கல்விஇலவசக் கல்வி ரு பட்டி, தொட்டிகளில் எல்லாம் பள்ளிக்கூடங்கள் ரு இலவச மதிய உணவுச் சீருடைகள், இப்படிப் பலதிட்டங்களைத் தீட்டி அமுல்படுத்தினார் காமராஜர். தமிழகத்தில் கல்விச் செல்வம் பெருகியது. கிராமங்கள் தோறும் ஓராசியர் பள்ளிகள் திறக்கப்பட்டன.

கல்விக் கேள்விகளில் மட்டும் சிறந்து விளங்கினால் போதுமா? நாட்டிலே பஞ்சம், பசி, வேலையில்லாத் திண்டாட்டங்கள் விலகி விடுமா? சிந்தித்தார் காமராஜர். திட்டங்கள் தீட்டினார். நாட்டிலே புதுப் புதுத் தொழிற்சாலைகளை நிறுவச்செய்தார். தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

காமராஜரின் கல்வித் திட்டங்கள் நிறைவேற உடனிருந்து பாடுபட்டவர் அந்நாள் பள்ளிக் கல்வி இயக்குனர் திரு.நெ.து. சுந்தரவடிவேலு ஆவார்.அதேபோல், காமராஜரின் தொழிற்திட்டங்கள் நிறைவேறக் காரணகர்த்தாவாக இருந்தவர் அன்றைய தொழில் அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் ஆவார்.

மூன்று முறை (195457, 195762, 196263) முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த காமராசர் பதவியை விட தேசப்பணியும் கட்சிப்பணியுமே முக்கியம் என்பதை மக்களுக்கும் குறிப்பாக கட்சித் தொண்டர்களுக்கும் காட்ட விரும்பி கொண்டு வந்த திட்டம் தான் ரிறிலிகிழி எனப்படும் 'காமராசர் திட்டம்' ஆகும். அதன்படி கட்சியின் மூத்த தலைவர்கள் பதவிகளை இளையவர்களிடம் ஒப்படைத்து விட்டு கட்சிப்பணியாற்றச் செல்ல வேண்டும் என்று இவர் நேருவிடம் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டார் நேரு. இந்தத் திட்டத்தை முன்மொழிந்த கையோடு தன் முதலமைச்சர் பதவியை பதவி விலகல் செய்து (02.10.1963) பொறுப்பினை பக்தவத்சலம் அவர்களிடம் ஒப்படைத்து விட்டு டெல்லி சென்றார் காமராசர். அக்டோபர் 9ஆம் நாள் அகில இந்தியக் காங்கிரஸின் தலைவர் ஆனார். லால்பகதூர் சாசுதிரி, மொரார்சி தேசாய், எசு.கே.பாட்டீல், செகசீவன்ராம் போன்றோர் அவ்வாறு பதவி துறந்தவர்களில் முக்கியமானவர்கள்.

காமராஜர் ஆட்சிக்காலத்தில் சாத்தனூர் அணை கட்டப்பட்டது. இதன் மூலம் 20,000 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெற்றன். இந்தத் திட்டத்திற்காக சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் செலவானது.மதுரையில் உள்ள வைகை அணையும் இரண்டரைக் கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் 20,000 ஏக்கர்நிலம் பாசன வசதி பெற்றது.சுமார் 3 கோடி செலவில் அமராவத அணை ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் 47,000 ஏக்கர் பாசன வசதி பெற்றது. நெல்லை மாவட்டம்தாமிர பரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மணிமுத்தாறு அணை காமராஜர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் 20,000 ஏக்கர் நிலம் கூடுதல் பாசன வசதி பெற்றது.1,100 ஏக்கர் பாசன வசதி பெறும் வகையில் வாலையார் அணை 1 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டது. இரண்டு கோடி ரூபாய் செலவில் கிருஷ்ணகிரி அணையும் காமராஜர் ஆட்சிக் காலத்தில்தான் ஏற்படுத்தப்பட்டது.சுமார் 2 லட்சம் ஏக்கர்கள் பாசன வசதி பெறும் வகையில் 10 கோடி ரூபாய் செலவில் கீழ்பவானித் திட்டம் காமராஜர் ஆட்சிக் காலத்தில்தான் ஏற்படுத்தப்பட்டது.சுமார் ஒன்றரைக்கோடி ரூபாய் செலவில் புள்ளம்பாடி திட்டம் உருவாக்கப்பட்டதால் சுமார் 22 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன.சுமார் 75 லட்சம் ரூபாய் செலவில் தென்னாற்காடு மாவட்டம் கோமுகி ஆற்றுத் திட்டம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் 8,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றது. இவை தவிர கன்னியாகுமரி மாவட்டம் பேச்சுப்பாறை அணை, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆழியாறு, பரம்பிக்குளம் அணைகளும் காமராஜர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டவை ஆகும். நீலகிரி மாவட்டத்திலுள்ள குந்தா அணையும் கர்மவீர் ஆட்சியில் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

காமாராஜர் ஆட்சிக் காலத்தில் பல்வேறு தொழிற் சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. குறிப்பாக சென்னை கிண்டியிலுள்ள தொழிற்பேட்டைகள், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் ஆகியவை காமராஜர் காலத்தில் உருவாக்கப்பட்டவை.இவைதவிர எண்ணூர் அனல் மின்சார நிலையம், தூத்துக்குடி துறைமுகம் போன்ற மிகப்பெரிய தொழில் திட்டங்களும் காமராஜர் ஆட்சிக் காலத்தில்தான் உருவாக்கப்பட்டன.

இந்திரா காந்தி நெருக்கடி நிலையினை அமல் செய்தபோது அதனைக் கடுமையாக எதிர்த்தவர்களில் காமராசரும் ஒருவர். இந்தியாவின் அரசியல் போக்கு குறித்து மிகுந்த அதிருப்தியும் கவலையும் கொண்டிருந்த நிலையில் 1975 அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் (காந்தியின் பிறந்தநாள்) உறக்கத்திலேயே அவரின் உயிர் பிரிந்தது. அவர் இறந்த போது பையில் இருந்த சிறிதளவு பணத்தைத் தவிர வேறு வங்கிக் கணக்கோ, சொந்த வீடோ, வேற எந்த வித சொத்தோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. தன் வாழ்நாள் இறுதி வரை வாடகை வீட்டிலேயே வசித்தார். **எம்.எஸ்.எம்.**

# பலன் தரும் பன்னிரு திருமுறை

தொடர்-1

திருச்சிற்றம்பலம்

திரு என்றால் தெய்வத்தன்மை பொருந்திய என்று பொருள். நெறி என்றால் நல்லொழுக்க நெறி என்று பொருள். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை வழிபட்டு, அந்த பெருமானது திருவருள் வழியே வாழ்க்கை நடத்திய திருமூலர், காரைக்கால் அம்மையார், நால்வர் பெருமானார்கள், சேக்கிழார் போன்ற பெரியோர்கள், யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்ற அருள் நோக்குடன், இறைவனின் திருவருளையே கண்ணாகக் கொண்டு தமது அனுபவத்தால் கண்டுணர்ந்த நல்லொழுக்க நெறியினை உலகத்தவர்க்கு தீந்தமிழ் பாடல்கள் மூலம் உணர்த்தினார்கள். அவ்வாறு அவர்கள் உணர்த்திய பாடல்களின் தொகுப்பே திருநெறித் தமிழ் என்றும் திருநெறி என்றும் வழங்கப் பெறுகின்றன. இந்த பாடல்கள் பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. சைவர்கள் பன்னிரு திருமுறைகளையும் தமிழ் வேதம் என்று கொண்டாடுவார்கள். முதல் திருமுறையின் முதல் பாடலாகிய தோடுடைய செவியன் என்று தொடங்கும் தேவாரப் பாடலின் முதல் எழுத்து தோ என்பதாகும். இது த் மற்றும் ஓ என்ற எழுத்துகளின் கூட்டாகும். த் என்ற மெய்யெழுத்து தமிழினை குறிப்பதாக கூறுவார்கள். சேக்கிழார் அருளிய பெரிய புராணம் உலகெலாம் என்ற சொல்லுடன் முடிகின்றது. முதல் திருமுறையின் முதல் எழுத்தையும் பன்னிரண்டாம் திருமுறையின் கடை எழுத்தையும் சேர்த்தால், தோம் என்ற சொல் கிடைக்கின்றது. இதனை முன்னரே கூறியவாறு த்+ஓம் என்று பிரிக்கலாம். ஓம் எனப்படும் பிரணவ மந்திரம், வேதத்தின் உட்பொருளாக கருதப்படுவதால் வேதங்களை குறிக்கும் சொல்லாக கருதப்படுகின்றது. இவ்வாறு பன்னிரு திருமுறைகளின் முதல் எழுத்தும் கடை எழுத்தும் சேர்ந்து, பன்னிரு திருமுறைகள் தமிழ் வேதம் என்று உணர்த்தும் வண்ணம் பெருமானின் திருவருள் அமைத்துள்ளது என்று கூறுவார்கள். மேலும் தேவாரப் பதிகங்கள் பல அற்புதங்கள் நிகழ காரணமாக இருந்தன. இந்த அற்புதங்களின் விவரங்களை நாம் பெரிய புராணத்தில் காணலாம்.

இந்த பன்னிரு திருமுறைகளில், முதல் ஒன்பது திருமுறைகள் பெருமானின் புகழினை எடுத்துரைக்கும் தோத்திரப் பாடல்களாகவும், பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் வேதத்தின் சாரத்தை எடுத்து உரைக்கும் சாத்திர நூலாகவும், பதினோராம் திருமுறை பலவகையான பாடல்கள் கலந்துள்ள பிரபந்தங்கள் அடங்கிய தொகுப்பு நூலாகவும், பன்னிரண்டாம் திருமுறை அருளாளர்களின் சரித்திரத்தை எடுத்துரைக்கும் சரித்திர



**வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு. வெங்கடேஸ்வரன் ஆன்மீகத்தின் மீது தனக்குள்ள அதீத ஈடுபாட்டினால் அதை எழுத்து வடிவமாக செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் நமது மித்ரா டைம்ஸ் இதழுக்கு மாதந்தோறும் தொடராக எழுத உள்ளார்.**



என். வெங்கடேஸ்வரன்

நூலாகவும் அமைந்து இருப்பதை நாம் காணலாம்.

பன்னிரு திருமுறைகளின் வரலாற்றினை முதன் முதலாக பதிவு செய்த பெருமை பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த, சந்தானக் குரவர்களில் ஒருவரான உமாபதி சிவாச்சாரியாரைச் சாரும் என்று தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வரும் செவிவழிச் செய்தி கூறுகின்றது. திருமுறை என்ற சொல் சேக்கிழாரால் பெரிய புராணத்தில் பயன்படுத்தப் பட்டிருப்பதால், அவரது காலத்திற்கு முன்னமே இந்த பாடல்களின் தொகுப்பினை திருமுறை என்று அழைத்தனர் என்று புலனாகின்றது. திருமுறை கண்ட புராணம் கூறும் செய்தியினை நாம் இங்கே சுருக்கமாக காண்போம்.

திருமுறை கண்ட சோழன் யார் என்பதில் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. எனினும் பெருவாரியான சான்றோர்கள், முதலாம் இராஜராஜ சோழன் தான் திருமுறை கண்ட சோழன் என்று முடிவு செய்துள்ளனர். சிலர் நம்பியாண்டார் நம்பி ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் முதற்பகுதியிலும் வாழ்ந்தவர் என்பதால், அவரது காலத்தில் இருந்த சோழ மன்னர்கள் ஆதித்த சோழன் என்றும் பராந்தகச் சோழன் என்று குறிப்பிட்டு, ஆதித்த சோழன் தான் திருமுறை கண்ட சோழன் என்று கூறுகின்றனர். எப்படியாயினும் சோழ மன்னன் ஒருவன் தான் திருமுறை கண்டெடுக்க உதவினான் என்பதில் கருத்து வேற்றுமை இல்லை. எனவே நாம் அந்த சர்ச்சைக்குள் புகாமல், பொதுவாக சோழமன்னன் என்று குறிப்பிட்டு திருமுறைகள் எவ்வாறு வெளிப்பட்டன என்பதை காண்போம். மூவர் முதலிகள் (திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் சுந்தரர்) பாடிய பாடல்கள் தேவாரம் என்ற பொது சொல்லால் பல கல்வெட்டுகளில் குறிப்பிடுகின்றன. மூவர் பெருமானார்கள் பாடிய பாடல்களில் தாங்கள் செவிவழியாக கேட்டறிந்த ஒரு சில பாடல்களை அடியார்கள் பாடக் கேட்ட, சோழ மன்னனுக்கு, கைகளிரண்டும் தலைமேல் குவித்து கண்களிரண்டும் தாரை தாரையாக நீர் பொழிந்து, உரோமம் சிலிர்த்து, நெஞ்சம் உருகி இறைவனை வழிபடும் இன்பநிலை ஏற்பட்டது. எனவே அனைத்து தேவாரப் பாடல்களையும் திரட்ட சோழ மன்னன் ஆர்வம் கொண்டான். ஆனால் பல இடங்களிலும் தேடியும் தேவாரப் பாடல்கள் முழுதும் அவனுக்கு கிடைக்கவில்லை. எனவே மன்னன் பெரிதும் வருந்தினான். இந்த நிலையில் திருநாரையூர் தலத்தில் வாழ்ந்து வந்த நம்பியாண்டார் நம்பி என்ற சிறுவன் விநாயகப் பெருமானின் அருள் பெற்று திகழ்ந்தமையை மன்னன் கேளலுற்றான். தேவாரப் பதிகங்களை முழுதும் கண்டேடுப்பதில் அவரின் உதவியை நாடுவது என்று தீர்மானித்தான்.

திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாரின் சன்னதியில் பூசனை புரியும் ஆதிசைவர் குடும்பத்தில், நம்பியாண்டார் நம்பி திருவவதாரம் செய்தார். அவருக்கு உரிய பருவத்தில் உபநயனச் சடங்கு நிறைவேற்றப்பட, அவர் வேதங்கள் கற்றுணர்ந்து ஓதத் தொடங்கினார். ஒரு நாள் அவரது தந்தையார், வெளியூருக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதால், தனது மகனை பிள்ளையாருக்கு பூசனை செய்யுமாறு பணித்துவிட்டு, தந்தையார் வெளியூர் சென்றார். தந்தையார் சொல்லியபடி பிள்ளையாருக்கு பூசனை செய்யத் தொடங்கிய மகன், பிள்ளையாரை நீராட்டி, சந்தனம் குங்குமம் இட்டு அழகு செய்து, ஆடைகள் உடுத்தி, தோத்திரங்கள் சொல்லி அர்ச்சனை செய்தார்.

முடிவினில், தனது தாய் கொடுத்தனுப்பிய பலகாரங்களை பிள்ளையார் முன் வைத்து, பிள்ளையாரை திருவமுது செய்யுமாறு வேண்டினார். பிள்ளையார் ஏதும் உட்கொள்ளவில்லை. தனது தந்தையார் தினமும் கோயிலுக்கு செல்லும் போது, பலகாரங்கள் எடுத்துச் செல்வதையும், திரும்பி வருகையில் பலகாரங்களின் ஒரு பகுதியை மட்டும் கொண்டு வருவதையும் பல நாட்கள் கவனித்திருந்த மகன், உண்மையாகவே பிள்ளையார் தந்தை படைக்கும் நிவேதனங்களை உட்கொண்டார் என்ற எண்ணத்தில் இருந்தார். எனவே தான், தான் நிவேதனம் அளித்த போது, பிள்ளையார் ஏதும் சாப்பிடாமல் இருந்தமையால் வருத்தம் கொண்டார். மீண்டும் மீண்டும் வேண்டிய போதும், பிள்ளையார் உட்கொள்ளாமல் இருந்தமையால், தான் செய்த பூசை முறையில் ஏதேனும் தவறு இருந்திருக்குமோ என்ற ஐயமும் கொண்டார். தான் செய்த தவறினால் பிள்ளையார் உணவு உட்கொள்ளவில்லை என்ற வருத்தத்தில், அருகே இருந்த கல்லின் மீது தனது தலையை மோதிக்கொண்டு உயிரினை விடவும் தீர்மானம் கொண்டார். அவ்வாறு செய்யப் புகுகையில், நம்பி பொறு என்ற குரல் எழுந்தது. பிள்ளையாரின் தும்பிக்கை நீண்டு நிவேதனப் பொருட்கள் அனைத்தையும் உண்டதைக் கண்டு மிகவும் நம்பி மகிழ்ந்தார். அடுத்த நாள் ஊருக்கு திரும்பிய தந்தை, தனது மனைவியிடம் மகன் பூஜை செய்தானா என்று வினவினார். அதற்கு அவரது மனைவி, தனது மகன் பூஜை செய்த போதிலும் இறைவனின் பிரசாதம் ஏதும் வீட்டிற்கு கொண்டு வரவில்லை என்பதை சொன்னாள். நம்பியை அழைத்து அவரது தந்தையார் விசாரித்த போது, பிரசாதம் அனைத்தையும் பிள்ளையார் உண்டதாக நம்பி கூறினார். முதலில் நம்பாத தந்தையார், தனது மகன் தான் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொன்னதால், அடுத்த நாளும் நம்பியையே பூஜை செய்யுமாறு பணித்தார். அடுத்த நாள் பூஜை முடிந்ததும், பிள்ளையாரின் தும்பிக்கை நீண்டு பிரசாதம் எடுத்துக் கொண்டதைக் கண்டு தந்தையார் வியந்தார். பிள்ளையாரால் ஆட்கொள்ளப்பட்டவர் தமது மகன் என்ற முடிவுக்கு வந்தார். அன்று முதல் நம்பியாண்டார் நம்பியே பிள்ளையாருக்கு பூஜை செய்யத் தொடங்கினார். இவ்வாறு பூஜையில் தினமும் ஈடுபடுவதால், தனது கல்வி தடைப்பட்டதை உணர்ந்த சிறுவன் பிள்ளையாரிடம் முறையிட, பிள்ளையார் அனைத்து கலைகளையும் சிறுவனுக்கு ஓதுவித்து அருளினார். நம்பியாண்டார் நம்பியும் தன்னை ஆட்கொண்ட விநாயகப் பெருமான் மீது திருவிரட்டை மணிமாலை என்ற நூலை இயற்றி வழிபட்டார்.

தொடரும்...

# தமிழ்நாட்டை தாக்கிய

# ஜி. எஸ். டி. புயல்

### பாதிப்பு போக போகத் தான் தெரியும் !

நாடாளுமன்ற மக்களவையில் 'சரக்கு மற்றும் சேவை வரி (நிஷிஜி) மசோதா' கடந்த மார்ச் 29ம் தேதி கொண்டுவரப்பட்டது. அப்போது பேசிய நிதியமைச்சர் அருண் ஜெட்லி, , "ஒரே வரி ஒரே நாடு" என்ற கொள்கையை அறி வித்துவித்தார்.. இதன்மூலம், நாட்டில் உள்ள 29 மாநிலங்களில் விதிக்கப்பட்டு இருக்கின்ற நூற்றுக்கும் மேற்பட்ட பலவிதமான வரிகள், பல்வேறு விதமான வரி விகிதங்கள் (ஒரே வரிக்கு) என்பது மாற்றப்பட்டுள்ளது. இந்தியா முழுமைக்கும் ஒரேமாதிரியான 5 அடுக்கு சரக்கு மற்றும் சேவை வரி வகுக்கப்பட்டுள்ளது.

வேற்றுமையில் ஒற்றுமை காண்பது நமது நாடு.இந்தியாவில் உள்ள மாநிலங்கள் அனைத்தும் ஒரே மாதிரியான பொருளாதார நிலை உள்ளவை அல்ல. விவசாயம், தொழில்வளம், நீர்வளம், மக்கள் தொகை, நில அமைப்பு போன்ற காரணங்களால் பொருளாதார

| | | | |
|---|---|---|---|
| கியாஸ் ஸ்டவ் | 18 | ரிபைண்டு சர்க்கரை | 18 |
| எலக்ட்ரிக் ஹாட் பிளேட் | 28 | சோப்பு | 18 |
| அலுமினிய பாத்திரங்கள் | 12 | ஹேர் ஆயில் | 18 |
| சமையல் எரிவாயு | 5 | கையால் செய்யப்படும் தீப்பெட்டி | 5 |
| செப்பு பாத்திரங்கள் | 5 | துடைப்பம் | 5 |
| ரேஷன் மண்ணெண்ணெய் | 5 | மெழுகுவர்த்தி | 12 |
| எவர்சில்வர் பாத்திரங்கள் | 5 | எல்.இ.டி., விளக்கு | 12 |
| ஊதுபத்தி | 12 | தயிர், லஸ்ஸி | 0 |
| வெண்ணெய், நெய், சீஸ் | 12 | முட்டை | 0 |
| ஜாம் | 18 | பனை வெல்லம் | 0 |
| பதப்படுத்திய மாமிசம் | 12 | குடை | 12 |
| பிராண்டட் தானியங்கள் | 5 | மொபைல் போன் | 12 |
| கோக்கோ வெண்ணெய் | 28 | பெட்ஷீட் | 18 |
| இன்ஸ்டன்ட் காபி | 28 | வெற்றிலை | 5 |
| பிளேடு | 28 | பொட்டு | 0 |
| பற்பசை | 28 | பழச்சாறு கலந்த பானம் | 12 |
| டியோடரன்ட் | 28 | முந்திரி, வறுத்த முந்திரி | 12 |
| ஆப்டர்ஷேவ் லோஷன் | 28 | சூயிங் கம் | 28 |
| பொரி, அப்பளம், ரொட்டி | 0 | கைவினை பொருட்கள் | 0 |
| மீன், கோழி கால்நடை தீவனம் | 0 | சமையல் எண்ணெய் | 5 |
| உப்பு | 0 | சர்க்கரை | 5 |
| காபி, டீ | 5 | சோயாபீன்ஸ், நிலக்கடலை | 5 |
| ஷார்ப்னர், கத்தி | 12 | கறிவேப்பிலை பொடி | 5 |
| ஐஸ்கிரீம், புட் மிக்ஸ், சர்பத் | 18 | பருத்தி விதை | 0 |

| | | | |
|---|---|---|---|
| உலர் பழங்கள் | 12 | எக்ஸ் – ரே படச்சுருள் | 12 |
| அழிக்கும் ரப்பர் | 18 | தொலை தொடர்பு | 18 |
| கோந்து | 5 | பெர்பியூம் | 28 |
| காலணி (ரூ.500க்குள்) | 5 | அழகு மற்றும் மேக்கப் சாதனங்கள் | 28 |
| காலணி (ரூ.500க்கு மேல்) | 18 | சன்ஸ்கிரீன் / சரும பராமரிப்பு பொருட்கள் | 28 |
| மின் விசிறி | 28 | ஷாம்பூ, ஹேர் கிரீம், ஹேர் டை | 28 |
| கம்ப்யூட்டர் | 18 | விக், ஒட்டு தாடி, ஐ லேஷ் | 28 |
| ஏர் கண்டிஷனர் | 28 | மெனிகியூர் & பெடிகியூர் செட் | 28 |
| ரெப்ரிஜிரேட்டர் | 28 | ஷேவிங் கிரீம் | 28 |
| ஸ்டோரேஜ் வாட்டர் ஹீட்டர் | 28 | பெயிண்ட் மற்றும் வார்னிஷ் | 28 |
| டிஷ் வாஷிங் இயந்திரம் | 28 | புட்டி வால் பில்லிங்ஸ் | 28 |
| பிரிண்டர், பேக்ஸ், ஜெராக்ஸ் இயந்திரம் | 28 | பிளாஸ்டர் | 28 |
| கைக்கடிகாரம் | 28 | செராமிக் டைல்ஸ் | 28 |
| நாற்காலி, மேசை உள்ளிட்ட பர்னிச்சர்கள் | 28 | செங்கல், சாம்பல் செங்கல் | 5 |
| வீடியோ கேம் கன்சோல்ஸ் | 28 | சிமெண்ட் | 28 |
| உடற்பயிற்சி சாதனங்கள் | 28 | தங்கம் | 3 |
| ஸ்போர்ட்ஸ் கூட்ஸ் | 12 | பெட்ரோலியம் கோக் மற்றும் பெட்ரோலிய தார் | 18 |
| சைக்கிள் | 12 | பழுப்பு நிலக்கரி | 5 |
| மூக்கு கண்ணாடி லென்ஸ் | 12 | தாமிர கட்டி, கம்பி, ஒயர் | 18 |
| வே புரோட்டீன்ஸ், பிட்னஸ் சாதனங்கள் | 18 | தாமிர ஸ்க்ரூ, நட் – போல்ட் | 18 |
| கிளீனிங் லிக்விட் | 28 | நிக்கல் பார், நட் – போல்ட் | 18 |
| மனித ரத்தம் | 0 | அலுமினிய வார்ப்பு (இன்காட்), கம்பி, ஒயர் | 18 |
| ஆணுறை / கருத்தடை சாதனம் | 0 | துத்தநாக சரக்குகள் | 18 |
| ஆயுர்வேதம், யுனானி மருந்துகள் | 12 | தகரம் பார், கம்பி | 18 |
| ஹோமியோபதி, சித்தா மருந்து பொருட்கள் | 12 | தாது மற்றும் செறிவூட்டிய தாதுப் பொருட்கள் | 5 |

ஏற்றத்தாழ்வுகளை அதிகமாக கொண்ட மாநிலங்கள். ஒரு மாநிலத்துக்கும் அதன் பக்கத்து மாநிலத்துக்குமான பொருளாதார நிலையே மலைக்கும் மடுவுக்குமானது. அப்படி இருக்கின்ற சூழ்நிலையில், இந்தியா முழுமைக்கும் சரக்கு மற்றும் சேவை வரியை ஒன்றாக்கி ஒரே ஒன்றியத்தை மத்திய அரசு ஏற்படுத்த முயற்சிக்கிறது. 'ஒரே வரி ஒரே நாடு' என்ற முழக்கத்துக்காக அரசியலமைப்பு மாநிலங்களுக்கு வழங்கியுள்ள வரி இயற்றும் உரிமையை காவு வாங்குகிறது மத்திய அரசு. இதனால், இந்தியாவில் மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடும் அரசியல் பிரச்சினைகள், சமூகப்பின்னணிகள், பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் உள்ளிட்ட காரணிகள் தேவையற்ற அரசியல் பதற்றச்சூழலுக்கு இந்தியாவை இட்டுச் செல்லும். இந்தியா போன்ற பெரிய பரப்பளவைக் கொண்ட நாடுகளில் பிராந்திய ரீதியான ஏற்றத்தாழ்வுகள் அதிகம் உள்ளது .வெவ்வேறு மாநிலங்களில் மாறுபடும் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப விளையும் பொருட்களை கொண்டு தயாரிக்கும் பொருள்களுக்கு ஒரே மாதிரியான வரிவிதிப்புகளினால் ஏற்படும் பாதிப்புகளை பின் வரும் காலம் பதில் சொல்லும்.

புதிய சரக்கு மற்றும் சேவை வரி சூழலில் மாநிலங்களின் புதிய வரிகள், தற்காலிக வரிகள் போன்றவை சாத்தியமில்லை. இதனடிப்படையில் பார்த்தால், பிராந்திய கட்சிகள் அந்தந்தப் பிராந்திய மக்களுக்கான தேவைகளின் அடிப்படையில் கொள்கைகளை வகுப்பது, அதற்கு நிதி ஆதாரங்களைத் திரட்டுவது போன்ற நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடப்புதிய சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) மசோதா உருவாக்கும். அரசியல் அதிகாரத்தில் இருக்கும் பிராந்திய கட்சிகளின் வரி இயற்றும் உரிமைகள் முற்றிலுமாக பறிபோகும். மாறுபட்ட முன்னுரிமைகளை வலியுறுத்தும் வெவ்வேறு மாநில கட்சிகளின் அரசியலை, தேசிய அரசியலோடு ஒன்றிணைப்பது மிகப்பெரிய சவாலாகும்..67 ஆண்டுகால இந்திய குடியரசில் மக்களியல், பொருளாதாரம், சமூகம் மற்றும் அரசியல் குறியீடுகளில் பெருமளவு ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்துள்ளன. புதிய வரிவிதிப்பு ஏற்பாட்டின் விளைவு நாட்டின் பொருளாதார மேம்பாடா? இந்திய அரசியல் ஒற்றுமையா? அல்லது பிளவுகளை

| | |
|---|---|
| 'ஏசி' ஓட்டல் | 18 |
| ஓட்டல் | 12 |
| சிறிய ஓட்டல் | 5 |
| ஓமிட் சிமெண்ட் | 18 |
| செய்தித்தாள் காகிதம் | 5 |
| காண்டாக்ட் லென்ஸ் | 12 |
| கார், டூ - வீலர் | அதிகபட்சம் 28 + செஸ் வரி |



ஏற்படுத்தும் அபாயகரமான விளைவுகளா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.ஜி.எஸ்.டி வரிவிதிப்பு மூலம் தற்போதுவரை நடைமுறையில் உள்ள 'வாட்'(கூஷிகிஜி) வரி, சுங்கவரி போன்ற பலவிதமான மத்திய அரசின் வரிகள் நீக்கப்பட்டு இந்தியா முழுவதும் விற்பனை செய்யப்படும் நுகர்வோர் பொருட்களுக்கு ஒரே மாதிரியான வரி நிர்ணயம் செய்யப்படவுள்ளது.

இந்த வரிவிதிப்பின்படி 1,200 பொருட்கள் மற்றும் 500க்கும் மேற்பட்ட சேவைகளுக்கு வரி நிர்ணயம் செய்யப்படுகிறது.

இதில் 5,12,14 மற்றும் 28 சதவீத வரி விதிப்பு என நான்கு அளவுகளில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வரி விதிக்கப்படுகிறது.

பல மாநில முதலமைச்சர்கள் சில பொருள்களின் வரி விதிப்பில் மாற்றம்

கேட்டுள்ளனர். தமிழக நிதி அமைச்சர் கோதுமை, மைதா, கடலைமாவு மற்றும் பிற மாவுகளுக்கு வரி விலக்கு அளித்திட வேண்டும் என்றும் தமிழகத்தில் குடிசைதொழில் முறையில் தயாரிக்கப்படும் கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியவை கரும்பு வெல்லத்திற்கு இணையாக வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும் என்று மத்திய அரசிடம் கோரியுள்ளார்.

கோவையில் தயாரிக்கப்படும் வெட் கிரைண்டரானது புவியியல் அங்கீகாரம்பெற்ற ஒரு பொருளாகும். இதற்கு




28 வரி விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.இந்த தொழில் பெரும்பாலும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் கீழ் உள்ளதால், இவை மத்திய கலால் தீர்வைக்கு உட்படுவதில்லை.இத்தொழிலுக்கான பெரும்பாலான மூல உள்ளீடுகள் 18 சதவீத வரிக்கு உட்படுவதால், வெட் கிரைண்டர் மீதான வரியினையும் 18ஆக குறைக்கப்பட வேண்டும் என்றார் அமைச்சர்.

அதே போல உணவகங்களுக்கும், மதுபானங்கள் வழங்காத குளிர்சாதன வசதியுள்ள சாதாரண உணவகங்களுக்கும் வேறுபடுத்தி 18சதவீதத்திற்கு பதிலாக 12 சதவீத வரி விதிக்கப்பட வேண்டும் என்றார் தமிழக நிதி அமைச்சர்.

வீட்டுத் தேவைக்கு அரிசியோ, உளுந்தம்பருப்போ, துவரம் பருப்போ சில்லரைக்கு எடை போட்டு வாங்கினால் அதற்கு வரி இல்லை.அந்த பொருட்களையே பாக்கெட்டில் அடைத்து விற்பனை செய்தால் 5 சதவீத வரி உண்டு. நடிகர் கமல் ஹாசன், பிராந்திய சினிமாவிற்கு இருக்கும் பலம் அந்த பிராந்தியத்தில்தான் இருக்கிறது என்றும், இந்தி சினிமாவோடு தமிழை ஒப்பிட்டு அதற்கு நிகரான வரியை விதிக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற வரிவிதிப்பு தமிழ் சினிமா மீது மிகப்பெரிய சுமையாக இருக்கும் என்று கூறிய கமல் ஹாசன் ஜி.எஸ்.டி வரிவிதிப்பால் தமிழ் சினிமா சின்னாபின்னமாகும் சூழல் உருவாகும் என்றார்.

28 % பதிலாக 12 % ஜி.எஸ்.டி வரி விதிக்க வேண்டும் என்று தமிழ் திரைப்படத்துறை சார்பில் மத்திய அரசிடம் கோரிக்கை வைக்க உள்ளதாக கமல் ஹாசன் தெரிவித்தார். தங்க நகைகள் மீதான வரிவீதத்தை பொறுத்த வரையில்,கையினால் தயாரிக்கப்படும் நகைகள் பொருளாதார ரீதியில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் இந்த தங்க வேலை செய்வதில் ஈடுபட்டுள்ளதால்கையினால் தயாரிக்கப்பட்ட நகைகள் மற்றும் இயந்திரம் கொண்டு தயாரிக்கப்பட்ட நகைகளை வேறுபடுத்தி வரி விதிக்க வேண்டும்.

ஆனால் பிரச்சனை என்னன்னா ஜிஎஸ்டி நுகர்வோர்களிடம் இருந்து மட்டுமே வசூலிக்கப்படுவதால் எந்த மாநிலம் அதிகம் செலவு செய்யுதோ அங்கு தான் அதிக வரி கிடைக்கும். தமிழகம், மகாராஷ் டிரம், குஜராத் போன்ற உற்பத்தி மிகுந்த மாநிலங் களுக்கு வரி அதிகம் கிட்டாது. ஜிஎஸ்டியில் ஒரு பங்கு மத்திய அரசுக்கு இன்னொரு பங்கு மாநிலத் திற்கு. இந்த சிக்கலின் போக்கு எப்படி இருக்கும் என்பது நடைமுறைக்கு வந்த பிறகே தெரியும்.

– பொருளாதார ஆலோசகர் ஜி.ராம்மோகன்



# நடிக்க வருபவர்கள் படிக்க வேண்டிய பாடம்

# நடிகர் திலகம் சிவாஜி கணேசன்

**1955** முதல் 1975 வரை இருபதாண்டு காலம் தமிழ்த்திரையுலகை ஆட்சி செய்த நடிகர்கள் இருவர். ஒருவர் எம்.ஜி.ஆர். மற்றொருவர் சிவாஜி கணேசன். சண்டை காட்சில், பாடல் காட்சிகளில் தனக்கென பாணி வகுத்துக் கொண்டு மக்களிடம் அபிமானம் பெற்றவர் எம்.ஜி.ஆர். தனது நடிப்பால் தன்னுடைய குடும்பத்தில் ஒருவராக பாசப்பிணைப்பினை வெளிப்படுத்தும் பல்வேறு நடிப்பையும் வெளிகொணர்ந்தவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர் மறைந்து 16 ஆண்டுகளுக்கு பிறகும் இன்றைக்கும் அவர் நடித்த ராஜபார்ட் ரங்கதுரை என்ற படம் நூறு நாட்களாக ஓடிக் கொண்டிருக்கிறது.

1921 ஆம் ஆண்டு அக்.1 ல் சின்னையா மன்றாடியார், ராஜாமணி அம்மையாருக்கும் மகனாக பிறந்தவர் சிவாஜி கணேசன். கமலாவை திருமணம் செய்து கொண்ட சிவாஜி கணேசனுக்கு 2 மகன்கள். 2 மகள்கள். 1980க்கு பிறகு தமிழ் திரையுலகை வெற்றிகரமாக வலம் வந்த நடிகர் பிரபு இவரது மகனாவார். இன்றைய நாட்களில் பிரபுவின் மகன் விக்ரம் பிரபு தமிழ் திரையுலகின் முன்னணி நட்சத்திரமாக வலம் வந்து கொண்டிருக்கிறார்.

சிவாஜி அவர்கள் நடித்த கப்பலோட்டி தமிழன் போன்ற தேசியத்தை உணர்த்தும் திரைப்படங்களாகட்டும், பாசமலர் போன்ற குடும்பத்தின் உறவுகளை வெளிப்படும் திரைப்படமாகட்டும், வசந்தமாளிகை போன்ற காதல் காவியங்களாகட்டும், கௌரவம், தங்கப்பதக்கம், போன்ற படமை உணர்த்தும் படங்களாகட்டும் ஏறத்தாழ அவர் நடித்த 300 படங்களும் காலத்தால் அழியாத காவிங்களாகும்.

அரசியலில் அவர் ஜொலிக்க விட்டாலும் திரையுலகில் முடிசூடா மன்னனாக விளங்கினார்.

பல முன்னணி நட்சத்திரங்களோடு அவர் நடித்திருந்தாலும் எம்.ஜி.ஆர். உடன் ஒரே ஒரு படத்தில் நடித்தார். அந்த படத்தின் பெயர் கூண்டுக்கிளி.





# நேர்மறை எண்ணங்கள் நல்ல பலனைத் தரும்.

ஒரு நாட்டின் மன்னன் யானை மீதமர்ந்து நகர்வலம் சென்று கொண்டிருந்தான்! அப்போது கடைத்தெருவில் ஒரு குறிப்பிட்ட கடை வந்த பொழுது மன்னன் அருகிலிருந்த மந்திரியிடம் "மந்திரியாரே ஏனென்று எனக்குப் புரியவில்லை ஆனால் இந்தக் கடைக்காரனைத் தூக்கிலிட்டுக் கொன்று விடவேண்டும் என்று தோன்றுகிறது" என்றான். மன்னனின் பேச்சைக் கேட்ட மந்திரி அதிர்ந்து போனான்! மன்னனிடம் விளக்கம் கேட்பதற்குள் மன்னன் அக்கடையைத் தாண்டி நகர்ந்து விட்டான்!

அடுத்த நாள் அந்த மந்திரி மட்டும் தனியாக அந்தக் கடைக்கு வந்தான்! அந்தக் கடைக்காரனிடம் யதார்த்தமாகக் கேட்பது போல வியாபாரம் நன்றாக நடக்கிறதா என்று விசாரித்தான்! அதற்கு கடைக்காரன் மிகவும் வருந்தி பதில் சொன்னான்! அவன் சந்தனக் கட்டைகளை வியாபாரம் செய்வதாகத் தெரிவித்த கடைக்காரன் " என் கடைக்கு வாடிக்கையாளரே யாரும் இல்லை! கடைக்கு நிறைய மக்கள் வருகின்றனர்! சந்தனக் கட்டைகளை முகர்ந்து பார்க்கின்றனர்! நல்ல மணம் வீசுவதாகப் பாராட்டக் கூட செய்கின்றனர், ஆனால் யாரும் வாங்குவதுதான் கிடையாது" என்று வருத்தத்துடன் சொன்னான் கடைக்காரன். அதன் பின் அவன் சொன்னதைக் கேட்ட மந்திரி அதிர்ந்து போனான்! "இந்த நாட்டின் அரசன் சாகும் நாளை எதிர்நோக்கியுள்ளேன்! அவன் இறந்து போனால் எப்படியும் எரிக்க நிறைய சந்தனக் கட்டைகள் தேவைப்படும் எனக்கு நல்ல வியாபாரம் ஆகி என் கஷ்டமும் தீரும்" என்றான் கடைக்காரன்! அவன் சொன்னதைக் கேட்ட மந்திரிக்கு முதல் நாள் அரசன் சொன்னதன் காரணம் என்னவென்று விளங்கியது! இந்தக் கடைக்காரனின் கெட்ட எண்ணமே மன்னனின் மனதில் எதிர்மறை அதிர்வுகளை அவனறியாமல் உண்டாக்கி அப்படிச் சொல்ல வைத்தது என்று உணர்ந்தான் மந்திரி!

மிகவும் நல்லவனான அந்த மந்திரி இந்த விஷயத்தை சுமுகமாகத் தீர்க்க உறுதி பூண்டான்! தான் யாரென்பதைக் காட்டிக் கொள்ளாமல் அவன் கடைக்காரனிடம் கொஞ்சம் சந்தனக் கட்டைகளை விலைக்கு வாங்கினான்! அதன் பின் மந்திரி அந்தக் கட்டைகளை எடுத்துச் சென்று அரசனிடம் நேற்று அரசன் சொன்ன அந்த சந்தன மரக் கடைக்காரன் அரசனுக்கு இதைப் பரிசாக வழங்கியதாகக் கூறி அதை அரசனிடம் தந்தான்! அதைப் பிரித்து அந்தத் தங்க நிறமுள்ள சந்தனக் கட்டைகளை எடுத்து முகர்ந்த அரசன் மிகவும் மகிழ்ந்தான்! அந்தக் கடைக்காரனை கொல்லும் எண்ணம் தனக்கு ஏன் வந்ததோ என்று வெட்கப்பட்டான்! அரசன் அந்தக் கடைக்காரனுக்கு சில பொற்காசுகளைக் கொடுத்தனுப்பினான்! அரசன் கொடுத்தனுப்பியதாக வந்த பொற்காசுகளைப் பெற்றுக் கொண்ட வியாபாரி அதிர்ந்து போனான்! அந்தப் பொற்காசுகளால்அவனது வறுமை தீர்ந்தது! இன்னும் அந்தக் கடைக்காரன் இத்தனை நல்ல அரசனை தன்னுடைய சுயநலத்துக்காக இறக்க வேண்டும் என்று தான் எண்ணியதற்கு மனதுக்குள் மிகவும் வெட்கப்பட்டு வருந்தினான்! அத்துடன் அந்த வியாபாரி மனம் திருந்தி நல்லவனாகவும் ஆகிப் போனான்!

குரு சிஷ்யர்களைக் கேட்டார் " சீடர்களே இப்போது சொல்லுங்கள் கர்மா என்றால் என்ன?" என்றார்! பல சீடர்கள் அதற்கு பல விதமாக "கர்மா என்பது நமது சொற்கள், நமது செயல்கள், நமது உணர்வுகள், நமது கடமைகள்" என்றெல்லாம் பதில் கூறினர்!!

குரு பலமாகத் தலையை உலுக்கிக் கொண்டே கூறினார் "இல்லையில்லை கர்மா என்பது நமது எண்ணங்களே "

நாம் அடுத்தவர்கள் மேல் நல்ல அன்பான எண்ணங்களை வைத்திருந்தால் அந்த நேர்மறை எண்ணங்கள் நமக்கு வேறேதேனும் வழியில் சாதகமாகத் திரும்பி வரும்!

மாறாக நாம் அடுத்தவர் மேல் கெடுதலான எண்ணங்களை உள்ளே விதைத்தால் அதே எண்ணம் நம் மேல் கெடுதலான வழியில் திரும்பவும் வந்து சேரும்.

- யோகி

# பூவே பூச்சூட வா!



உலகம் முழுவதும் 38 ஆயிரம் கோடிக்கு மேல் பூ வகைகள் உள்ளன.

ஆனால் ஆயிரம் கோடிப் பூக்கள் மட்டுமே தற்போதைய நடைமுறையில் உள்ளன.

அதிலும் 500 கோடி பூக்களே மருத்துவத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

பெரும்பாலான பூக்கள் மணமூட்டிகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

பூக்களைச் சூடும் கால அளவு

முல்லைப்பூ 18 மணி நேரம்

அல்லிப்பூ 3 நாள்கள் வரை

தாழம்பூ 5 நாள்கள் வரை

ரோஜாப்பூ 2 நாள்கள் வரை

மல்லிகைப்பூ அரை நாள்கள் வரை

செண்பகப்பூ 15 நாள்கள் வரை

சந்தனப்பூ 1 நாள்கள் மட்டும்

மகிழம்பூ மற்றும் குருக்கத்திப் பூ சாப்பிடும்போது மட்டும் சூடிக்கொள்ளலாம்.

மந்தாரைப்பூ, பாதிரிப்பூ, மாசிப்பூ இந்தப் பூக்களின் வாசம் இருக்கும் வரை மட்டும் சூடிக்கொள்ளலாம்.

ரோஜாப்பூ தலைச்சுற்றல், கண் நோய் போன்றவற்றைக் குணப்படுத்தும்.

மல்லிகைப்பூ மனஅமைதிக்கு உதவும். கண்களுக்குக் குளிர்ச்சி தரும்.

செண்பகப்பூ வாதத்தைக் குணப்படுத்தும். பார்வைத் திறனை மேம்படுத்தும்.

பாதிரிப்பூ காது கோளாறுகளைக் குணப்படுத்தும். செரிமானச் சக்தியை மேம்படுத்தும். காய்ச்சல், கண் எரிச்சல் போன்றவற்றைச் சரிசெய்யும்.

செம்பருத்திப் பூ தலைமுடி தொடர்பான பிரச்னைகளை சரிசெய்யும். உடல் உஷ்ணத்தைக் குறைக்கும்.

மகிழம்பூ தலை சம்பந்தப்பட்ட பிரச்னைகளைத் தீர்க்கும். பல் வலி, பல் சொத்தை உள்ளிட்ட பல் குறைபாடுகளை நீக்கும்.

வில்வப்பூ சுவாசத்தைச் சீராக்கும். காச நோயைக் குணப்படுத்தும்.

சித்தகத்திப்பூ தலை வலியைக் குறைக்கும். மூளை சுறுசுறுப்பாக இயங்க உதவும்.

தாழம்பூ நறுமணம் வீசுவதோடு சீரான தூக்கத்துக்கு உதவும். உடல் சோர்வை நீக்கும்.

தாமரைப்பூ தலை எரிச்சல், தலை சுற்றல் போன்றவற்றைச் சரிசெய்யும். மனஉளைச்சலை நீக்கி மனஅமைதிக்கு வழிவகுக்கும். தூக்கமின்மையை நீக்கி, சீரான தூக்கத்தை ஊக்குவிக்கும்.

கனகாம்பரம்பூ தலை வலி மற்றும் தலை பாரத்தைச் சரிசெய்யும்.

தாழம்பூ, மகிழம்பூ, சந்தனப்பூ, ரோஜாப்பூ செண்பகப்பூ போன்றவை வாதம், கபத்தைக் குறைக்கக் கூடியவை.

பூக்களைச் சூடும் முறை:

பூக்களைக் காதின் மேல் மற்றும் கீழ் நுனியின் இடைவெளியில் சூடவேண்டும்.

உச்சந்தலையிலோ, கழுத்துப் பகுதியிலோ பூக்கள் தொங்கும்படி சூடக் கூடாது.

மணமுள்ள பூக்களை வாசனையில்லாதப் பூக்களுடன் சேர்த்துச் சூடக்கூடாது.

அது கூந்தல் வளர்ச்சியைக் குறைக்கும்.

ஜாதி மல்லிகைப்பூ, செவ்வந்திப்பூ, குடசப்பாலைப்பூ, பாதிரிப்பூ, மகிழம்பூ, செண்பகப்பூ, சந்தனப்பூ, ரோஜாப்பூ போன்றவற்றைக் கனகாம்பரத்துடன் சேர்த்துச் சூடினால் மிகவும் நல்லது.

மந்தாரை, தாமரை, செவ்வரளி, கருங்குவளைப்பூ போன்றவற்றுடன் கற்பூரத்துடன் சேர்த்துச் சூடினால்

மனம் அமைதி பெற உதவும்.

மல்லிகைப்பூவை குளிப்பதற்கு முன் சூட வேண்டும்.

முல்லைப்பூ, வில்வப்பூவை குளித்த பின்பு சூடலாம். உடலில் எண்ணெய் தேய்க்கும்போது தாழம்பூ சூடலாம்.

பூக்களைச் சூடுவதால் ஏற்படும் நன்மைகள்:

பூக்களில் உள்ள பிராண ஆற்றல், மூளைச் செல்களால் ஈர்க்கப்பட்டு, நாளமுள்ள மற்றும் நாளமில்லாச் சுரப்பிகளின் சீரான இயக்கத்துக்கு உதவுகிறது.

இந்தப் பிராண ஆற்றலானது மனஅழுத்தத்தைக் குறைத்து, மனஅமைதிக்கு உதவுகிறது.

தலையில் பூ வைப்பது, மனமாற்றத்துக்கு உதவும். ஒரு விஷயத்தைப் பல கோணங்களில் பார்க்கும் தன்மையைக் கொடுக்கும்.மனஅழுத்தத்தால் ஏற்படும் செல் இழப்பைத் தடுக்கிறது.

பூவின் மணமானது உடல் செல்களுக்குப் புத்துணர்வை அளிக்கிறது. மனமாற்றத்துக்கு உதவுகிறது. மனஅழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது. மகிழ்ச்சியை உண்டாக்குகிறது.

# எம் பதில்கள்



## திராவிட இயக்கம் மட்டும்தான் தமிழுக்கு தொண்டாற்றி வந்திருக்கிறதா?

சென்னை மாகாணம் என்று இருந்ததை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்தது முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள். ஆனால் தமிழ்நாடு என்று பெயர் மாற்றக்கோரி 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தவர் கன்னியாகுமரியைச் சார்ந்த தமிழறிஞர் சங்கரலிங்கனார். ஆந்திராவுடன் சென்னையை இணைக்கும் முயற்சி நடந்தபோது அதை முறியடித்து சென்னை, திருத்தணி ஆகியவற்றை மீட்டவர் சிலம்பு செல்வர் ம.பொ.சி.என்ற ம.பொ.சிவஞானம். குமரி மாவட்டம் கேரளாவோடு இணைக்கும் முயற்சி நடந்தபோது அதைப் போராடி மீட்டவர் மார்ஷல் நேசமணி. இவர்கள் திராவிட இயக்கத்தை சேர்ந்தவர்கள் அல்ல.

## கட்சிக்குள் எவ்வளவு பிரச்சனை வந்தாலும் அதைப்பற்றி எந்தக் கருத்தையும் தெரிவிக்காமல் இருக்கிறாரே எடப்பாடி?

அதற்காக அவரை நரசிம்மராவோடு ஒப்பிட்டு சிலர் விமர்சிப்பது சரியல்ல... தனக்கு வழங்கப்பட்ட முதல்வர் பொறுப்பை திறம்பட செயல்படுத்துவதில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறார். மற்ற கட்சி விஷயங்களை கருத்து சொல்வதற்கோ... விவாதம் செய்வதற்கோ தன்னுடைய நேரத்தை விரயம் செய்வதால் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணியில் தேவையற்ற தொய்வு ஏற்படும் என்று அவர் எண்ணுகிறார். அதே நேரத்தில் மாநிலத்தின் வளர்க்குக்கு எந்தந்த வகையில் எல்லாம் தன்னால் பணியாற்ற முடியுமோ அதற்கு மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய உரிமைகளை எப்படி பெற்றுத் தர முடியுமோ... அதற்கான வழிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு செயல்படுத்தி வருகிறார். இப்போதைக்கு எடப்பாடியின் முதல்வர் பணி சிறப்பாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## நம்ம பிரதமர் மோடிக்கு நெதர்லாந்து பிரதமர் சைக்கிள் பரிசாக கொடுத்தாராமே?

மோடியின் வெளிநாட்டுப் பயணம் ஏதேனும் ஒரு விதத்தில் அனைவரது கவனத்தையும் ஈர்த்து விடுகிறது. இந்த முறை அமெரிக்கா உள்ளிட்ட நான்கு நாடுகளுக்கு சுற்றுப்பயணம்





செய்தபோது எந்த இடத்திலும் தங்காமல் விமானத்திலேயே நான்கு நாட்கள் தங்கியதாக சொல்லப்படுகிறது. "எப்போ பார்த்தாலும் வெளிநாடுகளையே சுற்றிக் கொண்டிருக்கின்ற நீங்கள் இந்தியாவில் சைக்கிளில் சுற்றுங்கள்" என்று நெதர்லாந்து பிரதமர் பரிசளித்திருப்பாரோ என்னவோ!

## மாடுகளை வதைக்கக் கூடாது என்று சொல்லி மனிதர்களை வதைக்கிறார்களே...!

இறைச்சிக்காக மாடுகளை கொல்லக்கூடாது என்று மத்திய அரசு



சட்டம் இயற்றியது. இது தொடர்பான விவாதம் மாட்டிறைச்சி தின்போருக்கும் மட்டிறைச்சி தின்னாதவருக்குமாக தொடங்கி பின்னர் தனிப்பட்ட விரோதமாக மாறி வருகிறது. குறிப்பாக முஸ்லீம்களும் தாழ்த்தப்பட்டோரும் மாட்டிறைச்சியை அதிகமாக பயன்படுத்துவதால் அவர்களுக்கு எதிராக மனநிலை கொண்ட ஆர்.எஸ்.எஸ். இதை ஒரு கௌரவ பிரச்சனையாக கருதுகிறது. அதன் வெளிப்பாடாகத்தான் டெல்லியில் மாட்டிறைச்சியை இரயிலில் கொண்டு சென்ற 17 வயது ஜுனைத் என்ற இஸ்லாமிய சிறுவன் கொல்லப்பட்டதாக சொல்லப்படுகிறது. தமிழகத்தில் மணப்பாறையில் இருந்து பொள்ளாட்சிக்கு கன்றுக்குட்டிகளை இயக்கிச் சென்ற மினி லாரியை மடாதிபதி ஒருவர் பழநியில் மடக்கி காவல் நிலையத்திற்கு கொண்டு செல்ல பெரிய கலவரம் உருவாகியிருக்கிறது.

## சுவாதி இறந்து ஓராண்டு ஆகிவிட்டதே...!

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய அந்த கொலைக்கு பின்பும் இரயில் நிலையங்களில் இன்னமும் கேமாராக்கள் பொருத்தப்படவில்லை என்பதும் போதிய பாதுகாப்பு வசதிகள் செய்து தரப்படவில்லை என்பதும் வேதனைக்குரிய விஷயம் இதுகுறித்து அதிகாரிகள் தரப்பில் டெண்டர் விவகாரமாக கேமராக்கள் பொறுத்தும் பணி தாமதப்படுவதாக கருத்து தெரிவித்துள்ளார்கள். எப்படியாவது பயணிகள் பாதுகாப்பு குறிப்பாக பெண் பயணிகள் அச்சமின்றி இரயிலில் சென்று வர உரிய பாதுகாப்பை அரசுகள் செய்ய வேண்டும்.



கபாலிகான் நியூஸ்

அலுவலகத்தில் நுழைந்த கபாலிகான். ஒரு டீ கொடுங்கள் என்றார்.

பால் இல்லை பால் பவுடரில் போட்டுத் தரட்டுங்களா? என்று கேட்டோம்.

பதறிப்போன கபாலிகான் ஆளைவிடுங்க சாமி டீயே வேணாம். பால் பவுடர் அரசியலை பாழாய் படுத்துதே? என்றார்.

**என்ன ஆச்சு?**

# "கஸ்தூரி சொன்னதால கண்டிப்பாக வருவார் பாருங்க"



அமைச்சர் ராஜேந்திர பாலாஜி

ரிலையன்ஸ், நெஸ்ட்லே போன்ற நிறுவனங்கள் தயாரித்து விற்பனை செய்யும் பால் பவுடரில் கலப்படம் இருப்பதாகவும் கெட்டுப்போன பாலில் அமிலத்தைக் கலந்து அதை பவுடராக கொடுப்பதால் அந்தப் பவுடரை வெந்நீரில் கலக்கி குழந்தைகளுக்கு கொடுக்கும்போது அந்த குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு, காலரா ஏன் கேன்சரே கூட



வைகைச் செல்வன்

வர வாய்ப்பிருக்கிறது என்ற அதிர்ச்சிகரமான தகவலை அமைச்சர் ராஜேந்திர பாலாஜி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**அதனால?**

அந்த நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதல்வரிடம் தெரிவித்ததாகவும், முதல்வர் பிரதமருக்கு கடிதம் எழுதி இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**ரிலையன்ஸ் மேலே நடவடிக்கை எடுக்கப்படுமா?**

பிரதமர் நரேந்திர மோடியின் அபிமானத்திற்குரிய ரிலையன்ஸ் மீது நடிவடிக்கை எடுப்பது அவ்வளவு எளிதல்ல.. தொடர்ந்து அமைச்சர் இப்படி பேசிக் கொண்டிருந்தால், அவர்மீது நடவடிக்கை நிச்சயம்.

**இதுக்காகவா அமைச்சருக்கும் வைகைச் செல்வனுக்கும் சண்டை?**

முன்னாள் அமைச்சரும், அ.தி.மு.க. செய்தி தொடர்பாளருமான வைகைச் செல்வன் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி மீது ஒரு குற்றச்சாட்டை சொல்ல, "அவர் பால் முகவர்களிடமிருந்து பணம் வாங்கிக் கொண்டு என்னைப் பற்றி தவறாகப் பேசுகிறார்" என்று அமைச்சர் சொல்ல "போஸ்டர் ஒட்டியவர்கள் எல்லாம் அமைச்சர் ஆனது காலத்தின் கொடுமை" என்று வைகைச் செல்வன் எகிற "வைகைச்செல்வன் ஒரு உரிச்ச பிராய்லர் கோழி, அழுகின தக்காளி அதை சாப்பிட முடியாது, குழம்புக்கும் ஆகாது" என்று அமைச்சர் பாய ஒரே கட்சிக்குள் வெட்டுக்குத்துதான்...

**குடியரசு தலைவருக்கு வலிய போய் தினகரன் ஆதரவு தெரி விச்சதா அரசியல் விமர்சனம் செய்யப்படுதே?**

எதுவாக இருந்தாலும் எதைப்பற்றிக்


## மித்ரா டைம்ஸ்

# சந்தா புதுப்பித்து விட்டீர்களா?

**மித்ரா டைம்ஸ் மாத இதழ் தாங்கள் தொடர்ந்து படித்து வருகிறீர்கள்! என்பதை தாங்கள் இதழ் குறித்து அனுப்பும் விமர்சனங்கள் வா யிலாக அறிகிறோம்.**

**தாங்கள் இதுவரை சந்தாவை புதுப்பிக்காமல் இருந்தால் உடனடியாக புதுப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம்!**

**சந்தா விவரம்**

**ஆண்டு சந்தா ரூ. 240/-**

**ஐந்தாண்டு சந்தா ரூ.1200/-**

தொடர்புக்கு :

001, இன்ஞ்சக்கல் பிளாக்,
சித்ரா அவென்யூ,
9,சூளைமேடு ஹைரோடு,
சென்னை94.
போன் : 044-23744661,
23743007/8

**Whatsapp No. 8248585067**

**E-mail : mitratimes2015@gmail.com**

**Website : www.mitratimes.com**

கேட்டாலும் நான் விதித்த கெடுவான ஆகஸ்ட் 5-ந் தேதிக்கு மேல் என் நடவடிக்கையை பாருங்கள் என்கிறார் தினகரன்.

**வேறு ஏதேனும் அரசியல்சண்டை உண்டா?**

ஆமா... அரக்கோணம் எம்.பி., அரிக்கும் பெரம்பூர் எம்.எல்.ஏ. வெற்றிவேலுக்கும் நடக்கும் சண்டை இருக்கே.. சசிகலா குடும்பத்தைப் பற்றி அரி கருத்தைச் சொல்ல, அதற்கு பதிலடியாக "அம்மா படத்தை செருப்பால் அடித்தவர் அரி" என்று வெற்றிவேல் சொல்ல பத்திரிகைகளுக்கு பெரும் தீனி கிடைத்தது.

**தி.மு.க. செய்தி ஒண்ணுமில்லையா?**

அருமையான வாய்ப்பிருந்தும் தி.மு.க. ஆட்சிக்கு வர எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மு.க.ஸ்டாலின் சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று தி.மு.க.வினரே ஆதங்கப்படுகின்றனர்.



**என்ன பண்ணனுங்குறாங்க?**

மூன்று அணியாக பிரிந்திருக்கிற அ.தி.மு.க.வின் பலவீனத்தை கலைஞர் மட்டும் நல்ல உடல் நிலையில் இருந்திருந்தால், சரியாக பயன்படுத்திக் கொண்டு ஆட்சிக்கு வரும் முயற்சியில் வெற்றி பெற்றிருப்பார். அல்லது தி.மு.க.விற்கு இந்த நிலைமை வந்து ஜெயலலிதா இருந்தால் அந்த வாய்ப்பை பயன்படுத்தி ஆட்சி அமைத்திருப்பார் என்கிறார்கள்.



அரி எம்.பி.



வெற்றிவேல் எம்.எல்.ஏ.



அரசியலுக்கு வருவது குறித்து நடிகை கஸ்தூரியிடம் விவாதம் நடத்துகிறார் ரஜினி



நடிகை லதா

### அந்த வாய்ப்பை பா.ஜ.க. சரியா பயன்படுத்திக்கிற மாதிரி தெரியுதே...!

ஆமாம். ஜெயலலிதா என்கிற மிகப்பெரிய ஆளுமை தமிழகத்தில் இல்லாததால் பா.ஜ.க.வினர் அந்த இடத்துக்கு ரஜினியைக் கொண்டு வந்து கழகங்கள் இல்லாத தமிழகத்தை கொண்டு வரப் போவதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

### ரஜினி வருவாரா?

அமெரிக்கா போயிருக்கிற ரஜினி, 2 மாதத்தில் தமிழகத்துக்கு வருவாருன்னு மட்டும் தெரியும். அரசியலுக்கு வருவாரான்னு தெரியலை...

### அவரை எல்லோரும் சந்திக்கிறார்களே?

யார் சந்தித்தாலும் சந்திக்காவிட்டாலும் நடிகை கஸ்தூரி, நடிகை லதா, ஆகியோரை சந்தித்த பின்புதான், ரஜினி அரசியலுக்கு வருவது உறுதியாகியிருக்கிறது.

### ஆனால் அவர் தான் அரசியல் வருவது குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை என்று சொல்கிறாரே?

ஆனால், நடிகை கஸ்தூரியும், நடிகை லதாவும் அவரை சந்தித்து விட்டு வெளியே வந்தபோது நிருபர்களிடம் ரஜினி நிச்சயம் அரசியலுக்கு வருவார் என்று நடிகை கஸ்தூரி சொன்னால் கண்டிப்பா வருவாரு பாருங்க..என்று கண்சிமிட்டியவாறே வெளியே சென்றார் கபாலிகான்.

# வீட்டில் தோட்டம் அமைக்க வேண்டுமா?



இன்றைய காலகட்டத்தில் வீட்டில் செடிகள் வளர்க்கும் மனோபாவம் அதிகரித்து உள்ளது. தாங்கள் வசிக்கும் இடத்திலேயே தோட்டம் அமைத்து பலவகை செடி, கொடிகளை வளர்க்க ஆசைப்பட்டு வளர்க்கிறார்கள். ஆனால் தோட்டக் கலையில் ஆர்வமுடைய பலருக்கு வீட்டில் போதிய இடம் இல்லையே என்ற ஏக்கம் உள்ளது. எப்படி தோட்டத்தை வளர்க்கலாம் என்பது பற்றிய திட்டமிடல் இருந்தால் போதும். தோட்ட ஆசைக்கனவை நிறைவேற்றி விடலாம். அதற்கு செய்ய வேண்டிய விஷயங்கள் என்ன?

வீட்டுத்தோட்டத்தில் என்ன என்ன செடிகளை வளர்க்கப் போகிறோம் என்று ஆய்வு செய்தபின், அந்த செடிகள் அந்தந்த காலநிலைக்கேற்றவாறு இசைந்து கொடுக்கும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.

எந்த செடிகளுக்கு அதிக சூரிய வெளிச்சம் தேவைப்படும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அந்த செடிகளை வீட்டின் எந்த இடத்தில் வளர்க்கலாம்? அந்த செடிகளால் மற்ற செடிகளின் வளர்ச்சி பாதிப்புள்ளாகும் வாய்ப்பு இருக்கிறதா? என்பது பற்றி தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

வீட்டின்முன் பகுதியில் சிறிய அளவில், காலியிடம் இருக்கும்பட்சத்தில் அதில் செடிகள் வளர்த்தால், வீட்டில் உள்ளவர்கள் நடமாடுவதற்கு இடையூறாக இருக்குமா? என்று பார்க்க வேண்டும். அங்கு செடிகள் வளர்ப்பதற்கு சாத்தியம் இருந்தால் இருக்கும் இடத்தை செடிகளால் எப்படி அழகாக்குவது என திட்டமிட வேண்டும். ஒரே வகை செடிகளை வளர்த்தால் நன்றாக இருக்குமா? என்பதை மனக்கணக்குப் போட்டு முடிவு செய்ய வேண்டும் அல்லது அருகில் உள்ள வீடுகளில் எந்தவகை செடிகள் வளர்க்கப்படுகிறது? அவை அழகாக காட்சியளிக்கிறதா? என்பதை பொறுத்து செடிகளை தேர்வு செய்ய வேண்டும்.

வீட்டின் முன் பகுதியில் செடிகள் வளர்க்கும் இடத்தில் தேவையான அளவு சூரிய ஒளி விழுகிறதா? என்பதை கவனிக்க வேண்டும். சூரிய ஒளி விழும் தன்மைக்கு ஏற்றவாறு செடிகளை தேர்ந்தெடுத்து வைக்க வேண்டும். அங்கு மண் பரப்பு இருந்தால் அதிலேயே செடிகளை வைக்கலாமா? அல்லது மண் தொட்டிகளில் வளர்க்கலாமா? இதில் எது வீட்டுக்கு அழகு தரும்? என்று பார்த்து செடிகளை வைக்க வேண்டும்.

மண் பரப்பிலேயே காய்கறி செடிகள் வளர்ப்பதாக இருந்தால் அந்த மண்ணின் தன்மை செடிகள் வளர்ப்பதற்கு ஏற்றதாக உள்ளதா? என்று பரிசோதித்து பார்த்து செடிகளை வைக்க வேண்டும். அதில் செடிகள் வளர்க்க முடிவு செய்த பின் இயற்கை உரக்கலவையை கலந்து மண்ணை மட்டுப்படுத்த வேண்டும். அப்போது அந்த மண்ணில் வளரும் செடிகள் செழிப்புடன் வளரும்.

மண் பரப்பில் வீட்டுத் தோட்டம் அமைக்கும்போது செடிகளுக்கு தண்ணீர் எப்படி ஊற்றுவது? என்பதை முதலிலேயே திட்டமிட்டு செயல்பட வேண்டும். குழாய் மூலம் தண்ணீர் கொண்டு வர வாய்ப்பிருந்தால் அதை செயல்படுத்தலாம். ஏனெனில் வாளியில் தண்ணீர் எடுத்துவந்து ஊற்றுவது மிக சிரமமாக இருக்கும்.

வீட்டின் முன்பகுதியில் தொட்டிகளில் தான் வளர்க்க முடியும். வீட்டில் ஆங்காங்கு இருக்கும் சிறிய இடங்களிலும்தொட்டிகளில் செடிகளை வளர்த்து வீட்டை அழகுபடுத்தலாம். வீட்டின் வெளிப்புறம் மட்டுமின்றி வீட்டின் ஜன்னல் ஓரத்திலும் தொட்டிகளை வைத்து அலங்கார செடிகளை வளர்த்து அறையை அழகு படுத்தலாம். சூரிய வெளிச்சம் அதிகம் தேவைப்படும் செடிகளை ஜன்னல் பகுதியில் வளர்க்கலாம். சமையல் அறை ஜன்னல்களில் தொட்டியில் கொத்துமல்லி, புதினா போன்ற செடிகளை வைத்து சமையல் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம். அறைக்குள் சூரிய ஒளி படும் இடங்களில் அலங்கார செடிகளை வளர்க்கலாம். அதிக சூரிய ஒளி தேவைப்படும் செடிகளை வீட்டின் வெளிப்புறம் வளர்ப்பது நல்லது. செடிகளை வளர்க்கும் ஆர்வம் இருந்தால் எந்த இடத்தையும் தோட்டமாக மாற்றி செடிகளை வளர்த்து நன்மைகளை அடையலாம்.

எம்.ஞானசேகர், விவசாய & தொழில் ஆலோசகர்

# KNOW YOUR TAMILNADU

1. Tamil Nadu is the second largest economy in India after Maharashtra.
2. Tamil Nadu is the only state which has Indian flag in its seal.
3. Tamil language spoken by Tamil Nadu people is one of the oldest classical languages in the world.
4. 60% of the Total epigraphical inscriptions of India found by ASI (ARCHAEOLOGICAL SURVEY OF INDIA) are from Tamil Nadu.
5. **Tamil Nadu has the following UNESCO World heritage sites,**
   - **Mahabalipuram**
   - **Three Chola temples: the Brihadisvara Temple at Thanjavur, the Temple of Gangaikonda Cholapuram and the Airavatesvara Temple at Darasuram build by chola empire.**
   - **Nilgiri Mountain railway**
   - **Darasuram**
   - **Western ghats (shared with other states)**
6. Rani Velu Nachiyar, was the woman freedom fighter of India against British colonialism and she was Queen of Siva Gangai. As my friend Pradyoth Hedge pointed out, the first woman freedom fighter of India was Rani Abbakka Chowta. She was the Queen of Ullal (Mangalore), who ruled parts of coastal Karnataka and fought against the Portuguese rule during the latter half of the 16th century.
7. Vellore mutiny of 1806 was the first instance of large scale uprising of Indian sepoys against British East India company.
8. Tamil Nadu has the highest proportion of women working in police force in India (12.5%)
9. TAMIL Written literature is the oldest in the world surviving for more than 2000 years.
10. TAMIL NADU is the largest producer of banana, turmeric, flowers and Tapioca in India.
11. The Traces of migration from Africa about 70000 years ago have been found in a village near Madurai, Tamilnadu. People living in Tamil Nadu may be one of the oldest thriving migrants from Africa. Every drop of human blood contains a history book written in the language of genes-- SPENCER Wells, population geneticist who surveyed the village-The rare genes of "NRYM130" which is found among all the primitive aboriginals was proved to be present in Jyothimanickam Village people.
12. Bhakti movement started in Tamil Nadu and spread to North India.
13. The game kabaddi originated in Tamil Nadu. India is by far the successful international kabaddi team in the world, know why? We have been playing it for centuries as our native sport.










14. TAMIL NADU is the top tourist state of India for three consecutive years from 2014
15. People of Tamil Nadu has great love for their language "TAMIL" that they have named their kids as follows:

    Tamil selvi/selvan Tamil Anbu Senthamil selvi/ selvan Tamilanban Tamil Arasan / Tamil Arasi

    Tamil Mithran Tamil Vanan Thamizhini Shemmozhi (classical language) Muthamilselvi Tamil priya Tamil Alagan Thenthamizhosai Tamizhnidhi Tamizhiniyal
16. Tamil Nadu leads the country in organ donation- Tamil Nadu leads country in organ donation
17. Tamil Nadu tops the nation in solar power and wind power generation.
18. The southern most point of India is not Kanyakumari.It is Indira point of Great nicobar islands, Union territory of Andaman and Nicobar Islands.
19. Chennai amounts to 60% of the country's automotive exports to the world. Chennai is known as the Detroit of India. It is one of the top ten automobile hubs of the world.Chennai emerging as global export hub for small cars: TN Govt - ET Auto
20. Spencer Plaza located in chennai is the oldest shopping mall of India.
21. Koyambedu bus terminus in chennai is the largest in Asia.
22. Vandalur zoological Park is the largest in India in terms of area. It is also the first public zoo of India.
23. World health organization (WHO) has rated ADYAR CANCER INSTITUTE as top ranking center in the country.
24. Kathipara Junction is the largest cloverleaf flyover bridge in Asia.
25. As Miss. Nancy Kashyap has pointed out, Archaeological evidences indicates the crucible steel process started in Tamil Nadu before the common era (0AD). This wootz steel was exported to Damascus, Syria from India to make Damascus steel which are used in making sharp resilient blades . India exported steel ingots to Middle East from 3 A.D. to 17 A.D.
26. Everyone knows that Marina Beach is the second longest beach of the world. But it must be noted that it is the longest natural urban beach in the world.
27. The world's largest solar power plant is in Kamuthi, Tamilnadu. It can generate a maximum of 648 MW.The largest solar power plant in the world is now in our backyard

28. The state of Tamil Nadu has erected statues for the foreigners as a recognition for their contributions to Tamil language and literature.

Constanzo Beschi, an Italian missionary known to us as VIRAMAMUNIVAR

Bishop Robert Caldwell - Irish linguist, missionary and Tamil language scholar

G.U Pope, who was best known for his translations of Thirukkural and Thiruvasagam

29. Fort St George was the first English fortress in India. It currently houses the Tamil Nadu legislative assembly and other official buildings.

30. Tamilnadu has given India the most number of Presidents. Sarvepalli Radhakrishnan-Ramaswamy Venkataraman-A. P. J Abdul kalam

31. Vedanthangal bird sanctuary is the oldest water bird sanctuary of India.

32. TAMIL NADU ranks first in the country in diversity of Flowering plants (Angiosperms). The state has 32% of total species of India.

33. The largest rose garden of India is Government Rose Garden, Ooty, India. The Garden has 22000 varieties of Rose.

34. All of the first 3 bharat ratna recipients were from tamil nadu (erstwhile madras presidency) .

CV RAMAN was the first Asian and first non-white to receive any Nobel Prize in the sciences.

C. RAJAGOPALCHARI - Last Governor General of India.

SARVEPALLI RADHAKRISHNAN- Second president of India.

35. The world's renowned mathematician, SRINIVASA RAMANUJAM was from Tamilnadu. Indian government has declared his birthday (December 22) as National Mathematics day. Credits: Srivathsan Iyengar

36. Madras was the only city in India which was attacked by the central powers of Germany, Austria and Hungary during the First world War (1914–18). The German warship SMS EMDEN targeted the Oil tankers in the Madras Harbour.

37. THIRUKKURAL :Thirukkural is one of the most translated non-religious works in the world. It has earned the title "ULAGA PODHU MARAI" (The Universal scripture).

Leo Tolstoy was inspired by the concept of non-violence in the German translation of Thirukkural. He instilled this concept in to MAHATMA GANDHI through his A letter to a Hindu.Mahatma Gandhi took to studying Thirukkural in prison. He described it.A textbook of indispensable authority on moral life. The maxims of Valluvar have touched my soul. There is none who has given such a treasure of wisdom like him.A two line, seven worded sentence can have such purity and worldly idea. Check out my profile description for a Thirukkural which inspires me. There is a Thirukkural which can make sense for each and every person living on earth.

39. Few things are stranger than fiction KUMARI KANDAM (LEMURIA CONTINENT) -In the 19th century, a section of the European and American scholars speculated the existence of a submerged continent called LEMURIA , to explain geological and other similarities between AFRICA, INDIA and MADAGASCAR. The presence of Pandyan Kingdom in Kumari Kandam is described in ancient Tamil and Sanskrit literature."Kumari Kandam" first appear in Kanda Puranam, a 15th-century Tamil version of the Skanda Purina.Land mass submerged, Literature drowned, but culture remains.You will never know whether this fact is true or not. But you can't reject the fact either.

40. BODHIDHARMAR was the transmitter of Chan Buddhism to China. According to Chinese legend, he trained the monks of Shaolin Temple that led to the creation of Shaolin Kung-fu.

How he is related to Tamils? He was the third son of a pallava king, who renounced his royalty and practiced Buddhism. The references are from ancient Chinese and tamil scriptures. Dàoxuān, a 7th century Chinese historian referred Bodhidharma's origins ashe was of "South Indian Brahman stock"Brahman here refers to pallava kings.

41. For those people, who are hungry after reading the answer. Vada was believed to be popular among Tamil people during 100 BC to 300 BC. Why there is a hole in between? To maximize the surface area to volume ratio, so that it is completely cooked.

Chicken 65 was introduced in Buhari hotel, Chennai in 1965. Now you know why 65 !!!Chicken 65 appears as the 65th item of Buhari hotel menu card.

Koozh - a millet porridge -Madras kaapi & kumbakonam Degree kaapi

Tamilnadu cuisine-Traditionally the banana leaf is laid so that the leaf tip is pointed left as most Tamils were right handed and would be easier for a right hander to eat if placed that way as he will have more leaf space on his right. Salt is placed on the left as it would require less space and will be served in less quantity.

Before the feast begins the leaf is sprinkled with water and cleaned by the diner himself even though the leaves are already clean.The top half of the banana leaf is reserved for accessories, the lower half for the rice. After finishing, the banana leaf becomes food for cows. Credits: Balaji Mani Khumaran M

42. Nobel laureates who had their origins from Tamil Nadu / Madras state
    Nobel Prize for physics-Sir C V Raman-Subramanyan Chandrasekhar-
    Nobel Prize for chemistry-Venkatraman Ramakrishnan.Credits: Vishnu N
43. JUSTIN-For the First time in INDIA, Transgenders are now applicable for the post of Sub Inspector of POLICE at Tamil Nadu.K Prithika Yashini is the first transgender person to become a police official in India
44. Tamil Nadu is the only state covered with three seas of India (Bay of Bengal, Arabian Sea, Indian ocean) Credits: Balakrishnan Subramaniyan
45. Tamilnadu is the pioneer and the first state in India to introduce Mid-Day meal scheme in India. It was introduced first in Chennai and extended later to all other districts by the late chief minister Thiru K. Kamarajar.Credits: Melba Sydney
46. Mathoor Aqueduct or hanging bridge is one of the highest and longest in South Asia. It was constructed in 1966 as a drought relief measure across river Pahrali in Nagercoil, Kanyakumari
47. Siddha medicine originated from ancient Tamilakam. Agasthiyar was considered the first Siddha and guru of all Siddhars. National Institute of Siddha was established in chennai to promote reasearch, higher studies and global recognition for Siddha Medicine.
48. Chennai is the health capital of India and attracts about 45% of Health Tourism in the country. Chennai Hospitals treats about 150 international patients every day.
49. Chennai is the first city in India to have municipal Corporation and it has completed more than 365 years and second oldest in the world after London city.Credits: Mansi Chals
50. Bharathanatyam is possibly the oldest classical dance tradition of India.
51. AVM Productions in chennai is the oldest surviving film studio in India.
52. Meet Rama, a White Tiger born at Vandalur Zoo in 2011.He was used to the Tamil language commands given at the vandalur zoo and when he was transferred to Udaipur, Rajasthan, the Tiger could not understand the Mewari language or any other. A Tamil caretaker was sent to Udaipur zoo to settle the issue.Either the tiger learns Mewari language or the caretakers here learn Tamil.Said an official at the zoo.I'm unable to fathom which is easier, but Rama sure did made Tamil Nadu proud.Source: Udaipur-bound white tiger Rama puts new keepers in 'Tamil' soup
53. College of Engineering, Guindy is one of the oldest Technical and Engineering institution of India. It was established as a school of survey in 1794 and established as a college in 1859.
54. Siruvani River water is one of the tastiest River water in the world. Siruvani is the tributary of Bhavani in coimbatore, which is inturn a tributary of river cauvery
55. PAMBAN Bridge connecting Rameshwaram Island with mainland is India's first sea bridge (1914) and second longest sea bridge in India.

**G.RamMohan**

# அர்த்தங்கள் 16 !



1 எல்லா உறவுகளும் கண்ணாடி மாதிரிதான். நாம் எப்படிப் பழகுகின்றோமோ அப்படித்தான் அதன் பிம்பங்களும்...

2 தடுமாறும் பொழுது தாங்கிப் பிடிப்பவனும், தடம் மாறும் பொழுது தட்டிக் கேட்பவனுமே உண்மையான நண்பன். இது எனக்கு பிடித்த முதல் வரிகள் உங்களுக்கு...?

3 உங்களைப் புரிந்து கொண்டவர்கள் கோபப்படுவதில்லை. உங்களைப் புரியாதவர்களின் கோபத்தை நீங்கள் பொருட்படுத்த வேண்டியதில்லை...

4 குழந்தைகளிடம் அருகில் அமர்ந்து பொறுமையாக பழகிப் பாருங்கள். நாம் முன்னர் எப்படி நடந்து கொண்டோம் என்பது நன்றாக புரியும்.

5 வயதானவர்களிடம் பழகிப் பாருங்கள். நாம் எப்படி இருக்கப் போகிறோம் என்பது முழுமையாகப் புரியும்.

6 ஒருவர் உங்களைத் தாழ்த்திப் பேசும் போது ஊமையாய் இருங்கள்....! புகழ்ந்து பேசும் போது செவிடனாய் இருங்கள்...!எளிதில் வெற்றி பெறுவீர்கள்.

7 சங்கடங்கள் வரும் போது தடுமாற்றம் அடையாதீர்கள்...! சந்தர்ப்பங்கள் வரும் போது தடம் மாறாதீர்கள்.

8 வளமுடன் பணமுடன் வாழும் போது நண்பர்கள் உங்களை அறிவார்கள். பிரச்சினைகள் வரும் பொழுதுதான் நண்பர்களைப் பற்றி நீங்கள் நன்றாக அறிவாய். யார் உண்மையான நண்பர்கள் என்று...?

9 ஒரு முறை தோற்றுவிட்டால், அதற்கு நீங்கள் வேறு ஒருநபரை காரணம் சொல்லலாம். ஆனால், தோற்றுக் கொண்டே இருந்தால், அதற்கு நீங்கள் மட்டுமே காரணம்.

10 நீ சிரித்துப் பார்! உன் முகம் உனக்குப் பிடிக்கும். மற்றவர்களை சிரிக்க வைத்துப் பார்: உன் முகம் எல்லோருக்கும் பிடிக்கும்.

11 அவசியம் இல்லாததை வாங்கினால், விரைவில் அவசியமானதை விற்க நேரிடும்.

12 வாழ்க்கையில் தோற்றவர்கள் இரண்டு பேர்... ஒருவர் யார் பேச்சையும் கேட்காதவர். மற்றொருவர், எல்லோருடைய பேச்சையும் கேட்பவர்.

13 எண்ணங்களை அழகாக மாற்ற முயற்சி செய்தாலே போதும். வாழ்க்கை என்பது மகிழ்ச்சியாக மாறிவிடும்.

14 நீங்கள் ஒருவனை ஏமாற்றி விட்டால், அவனை முட்டாள் என்று நினைக்காதீர்கள். நீங்கள் ஏமாற்றியது அவன் உங்கள் மேல் வைத்திருந்த முழு நம்பிக்கையையே ஆகும்.

15 அமைதியாய் இருப்பவனுக்குக் கோபப்படத் தெரியாது என்பதல்ல அர்த்தம். கோபத்தை அடக்கி ஆளும் திறமை படைத்தவன் என்பதே அர்த்தம்.

16 மரியாதை வயதைப் பொறுத்து வருவதில்லை. அவர்கள் செய்யும் செயலைப் பொறுத்தே வருகின்றன....!

**தட்சிணா மூர்த்தி நடராஜன்**

# உப்பைக் குறையுங்கள்!

**உடலில் ஏற்படும் நோயைக் குறைக்க உப்பை குறைக்க மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள். உண்ணும் உப்பு மட்டுமல்ல.. பின்வரும் உப்புகளும்தான்.**

**கணவன்கள் - *படபடப்பு***
**மனைவிகள் - *நச்சரிப்பு***
**டீன் ஏஜ்க்கள் - *பரபரப்பு***
**மாணவர்கள் - *ஏய்ப்பு***
**மாமியார்கள் - *சிடுசிடுப்பு***
**மருமகள்கள் - *கடுகடுப்பு***
**வக்கீல்கள் - *ஒத்திவைப்பு***
**டாக்டர்கள் - *புறக்கணிப்பு***
**அரசியல்வாதிகள் - *ஆர்ப்பரிப்பு***
**வயதானவர்கள் - *தொணதொணப்பு***

**ஆனால்,**
**யாரும் குறைக்கத் தேவையில்லாத ஒரே உப்பு சிரிப்பு.**
**இது உடம்புக்கு மிகச்சிறப்பு...**




# மித்ரா டைம்ஸ்

**மாத இதழ்**

மித்ரா 3 ஜுலை 2017 டைம்ஸ் 2

அச்சிட்டுவெளியிடுபவர்
ஆசிரியர்
**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
**திருமதி. சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்
**தம்பி முருகானந்தம்**
**9381788645**

இதழ் சிறப்பு ஆலோசகர்கள்
G. **ராம்மோகன்**
R. **குணசேகர்**

நிர்வாக மேலாளர்
V. **மோகன்ராஜ்**

சட்ட ஆலோசகர்
V.N.**பிரசாத்** M.A.,B.L.,

மாவட்ட செய்தியாளர்கள்
**திண்டுக்கல் முபாரக்**
**கோவை K. சாகுல் ஹமீது**
**சேலம் பிரவீன்குமார்**
**ஈரோடு ஸ்ரீரங்கன்**
**மேட்டூர் மணி**

**வடிவமைப்பு**
**மித்ரா டிசைன்ஸ்**
விற்பனை, விளம்பரம், சந்தா
**044-23743007/8**



## தொடர்புக்கு :

001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு, சென்னை94.
போன் : 044-23744661,23743007/8

**Whatsapp No. 8248585067**
**E-mail : mitratimes2015@gmail.com**
**Website : www.mitratimes.com**



**Owned and published by M.SUNDARAMOORTHY from No.602 Suruthi Block, Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai-600 094. and printed by him at SRI PADMALAYA PRINTERS. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai-600 021. Editor : M.SUNDARAMOORTHY.**

# ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தலைமையில்
# காசியில் ஆடி அமாவாசை (23-07-2017) அன்று
# திலஹோமம் மற்றும் அன்னதானம்



**மேலும் அனைத்துவிதமான பித்ரு தோஷங்களிலிருந்தும் விடுபடவும் பித்ருக்களின் முழுமையான ஆசிபெறவும் கங்கை நதிக்கரையில் உள்ள மணிகர்ணிகாவில் தலைமுறைகளை செழிக்க வைக்கும் சிரார்த்த நாராயண பூஜைக்குபின் சுபதீபம் ஏற்றி பித்ருக்களை சாந்தபடுத்த வழிபாடு நடத்தப்படும்**

காசியில் பித்ரு தர்ப்பணம் செய்வது நமது இன்றியமையாத கடமையாகும். பித்ரு தர்ப்பணத்தால் நம் குடும்பம் பெறும் நன்மைகள் ஏராளம். புண்ணியத்தின் புதையல் அது. எவ்வித துன்பத்தையும் போக்கும் சக்தி பித்ரு வழிபாடுக்கு மட்டுமே உண்டு. காசி ச்ராத்தம் பித்ருக்களுக்கு பேரானந்தத்தையும், திருப்தியையும் அளிக்கும். இன்றைய சூழ்நிலையில் எல்லோராலும் முக்தி க்ஷேத்ரமாக விளங்கும் காசியில் பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்யமுடியாது என்பதால், தங்கள் சார்பாக ஜோதிட சிம்மம், ஸ்ரீயோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி, விருட்ச சாஸ்திர வித்வான் பூஜ்ய **ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா** அவர்கள் தலைமையில் ஆடி அமாவாசை அன்று காசியில் பித்ருக்கள் நினைவாக வைதீக முறைப்படி பித்ரு தர்ப்பணம், திலஹோமம் மற்றும் அன்னதானம் நடைபெறும். இதில் தாங்கள் அனைவரும் கலந்துகொண்டு அனைத்துவிதமான தோஷங்களிலிருந்தும் விடுபட்டு, பித்ருக்களின் ஆசியுடன் நம் குலம் தழைத்து, வாழையடி வாழையாய் வளமுடன் வாழ்வோம்.

**நம்மை வாழ வைத்த தெய்வங்கள் நினைவாக நடைபெறும் திலஹோமம், அன்னதானம் மற்றும் பித்ருக்களை சாந்தப்படுத்த நடைபெறும் தீப வழிபாட்டிற்கும் தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு திருக்கயிலாயத்தில் இருந்து நேரடியாக பெறப்பட்ட கீழ்கண்ட மருத்துவகுணம் கொண்ட (Rudhraksha Therapy) ஒரிஜினல் ருத்ராட்சங்கள் மற்றும் ஸ்ரீஅன்னபூரணி விக்ரகம், யந்திரம் அனுப்பி வைக்கப்படும்**

## அளவில்லா ஆற்றல்களும் புனிதத்தன்மையும் நோய் எதிர்ப்பு சக்தியும் கொண்டது ருத்ராட்சம்

**ரூ. 300 - அனுப்பும் அன்பர்களுக்கு, ருத்ராட்ச ஜெபமாலை அனுப்பி வைக்கப்படும்**
(ருத்ராட்ச ஜெபமாலை அணிவதால் வியாபாரத் தடை நீங்கி, தொழில் வளர்ச்சி ஏற்படும். மேலும் செய்வினை தோஷம் நீங்கும்)

**ரூ. 500 - அனுப்பும் அன்பர்களுக்கு, 5 முகம் (சிவஸ்வரூபம்) கொண்ட ருத்ராட்சம் 5 அனுப்பி வைக்கப்படும்**
(5 முக ருத்ராட்சத்தை அணிவதால் கணவன்-மனைவி, குடும்ப ஒற்றுமை உண்டாகும். மேலும் பிரம்மஹத்தி தோஷம் நீங்கும்)

**ரூ. 1000 - அனுப்பும் அன்பர்களுக்கு, 6 முகம் (ஸ்ரீசுப்பிரமணியர்) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்**
(6 முக ருத்ராட்சத்தை அணிவதால் மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற உதவும். மேலும் மாத்ரு, பித்ரு தோஷம் நீங்கும்)

**ரூ. 2000 - அனுப்பும் அன்பர்களுக்கு, 7 முகம் (சப்த ரிஷி) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்**
(7 முக ருத்ராட்சத்தை அணிவதால் தடைபட்ட திருமணம் நடக்கும். மேலும் செவ்வாதோஷம் விலகி சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்)

**ரூ. 3000 - அனுப்பும் அன்பர்களுக்கு, 8 முகம் (விநாயகர்) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்**
(8 முக ருத்ராட்சத்தை அணிவதால் கடன் தொல்லையிலிருந்து விடுபட உதவும். மேலும் திருஷ்டி தோஷம் விலகும்)

**ரூ. 3500 - அனுப்பும் அன்பர்களுக்கு, 9 முகம் (மகா பைரவர்) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்**
(9 முக ருத்ராட்சத்தை அணிவதால் ரத்த அழுத்தம், மன அழுத்தம், தூக்கமின்மை, கோபம் நீங்கும். மேலும் நவகிரஹ தோஷம் நீங்கும்)

**ரூ. 4000 - அனுப்பும் அன்பர்களுக்கு, 10 முகம் (மகாவிஷ்ணு) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்**
(10 முக ருத்ராட்சத்தை அணிவதால் சர்க்கரை, ஆஸ்துமா நோய், இதய கோளாறு சீராகும். மேலும் நாக தோஷம் நீங்கும்)

**ரூ. 4500 - அனுப்பும் அன்பர்களுக்கு, 11 முகம் (வீர ஹனுமான்) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்**
(11 முக ருத்ராட்சத்தை அணிவதால் புத்திர தோஷம் நீங்கி புத்திர பாக்கியம் உண்டாகும். மேலும் குடிபழக்கத்திலிருந்து விடுபட உதவும்)

**ரூ. 5000 - அனுப்பும் அன்பர்களுக்கு, 12 முகம் (சூர்ய பகவான்) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்**
(12 முக ருத்ராட்சத்தை அணிவதால் விபத்துக்களிலிருந்து பாதுகாக்க உதவும். மேலும் ஏழரை சனி, அஷ்டம சனி விலகும்)

**ரூ. 6000 - அனுப்பும் அன்பர்களுக்கு, 14 முகம் (நெற்றிகண் ஸ்வரூபம்) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்**
(14 முக ருத்ராட்சத்தை அணிவதால் புற்றுநோய், புகை பழக்கத்திலிருந்து விடுபட உதவும். மேலும் குல தோஷம் நீங்கும்)

## ருத்ராட்சத்தை தரிசித்தால் லட்சம் மடங்கு புண்ணியம், அணிந்தால் நூறு கோடி புண்ணியம்




காசியில் சாதுக்களுக்கு நடைபெற்ற அன்னதானம்

**ஆண்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் அனைவரும் சூரியனுக்கு ஒப்பான ஆற்றல் கொண்ட உயிர்சக்தியை ஊக்குவிக்கும் ஒரிஜினல் ருத்ராட்சங்களை அணிந்து அனைத்துவித நன்மைகளையும் பெறலாம். ருத்ராட்சம் அணிபவர்களை சுற்றிலும் அபூர்வமான அதிர்வலைகளை ருத்ராட்சம் உண்டாக்கி அவர்களை கவசம்போல் பாதுகாக்கிறது**

முன்னோர்கள் நினைவாக காசியில் தர்ப்பணம், திலஹோமம், அன்னதானம், கங்கையில் நடைபெறும் வழிபாட்டிற்கும் ரூபாய் அனுப்பும்போது யார் நினைவாக செய்ய விரும்புகிறீர்களோ அவரின் முழு விபரங்களை தெரிவித்தால், அதன்படி ஆடி அமாவாசை அன்று காசியில் மேற்கண்ட பூஜைகள் தங்கள் சார்பாக செய்யப்பட்டு விசேஷ பூஜை பொருட்களும், பிரசாதங்களும், ரசீதும் மற்றும் புனித கங்கை நீரும் ஆடி அமாவாசை முடிந்தபின் அனுப்பி வைக்கப்படும்



ஆடி அமாவாசை அன்று முன்னோர்கள் நினைவாக காசியில் நடைபெறும் தர்ப்பணம், திலஹோமம், அன்னதானம் மற்றும் கங்கையில் நடைபெறும் வழிபாட்டிலும் பங்குபெற விரும்பும் அன்பர்கள் தாங்கள் விரும்பும் நன்கொடையை **CHEQUE/DD/MO** ஆக **SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST, CHENNAI** என்ற பெயரில் அல்லது **Direct Remittance-**ஆக **SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST, ICICI BANK, MYLAPORE BRANCH, SB A/C NO: 218601000079, IFSC CODE: ICIC0002186** என்ற வங்கி கணக்கில் அல்லது ஆன்லைன் மூலமாக **sriannapooraniannadhanam.com** என்னும் எங்களுடைய இணையதளத்தின் மூலமாகவும் நன்கொடையை அனுப்பலாம்



நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

## ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்®

4, Appavoo Gramani 3rd Street, R.A. Puram, Chennai - 28

sriannapooraniannadhanam@gmail.com
sriannapooraniannadhanam.com
**89393 77777**
**89393 88888**

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/16-18
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month

